# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு ஆடி மாதம் 25ந்- திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 28-ம் இலக்கம்


### கல்லோயாப் பொலிஸ்ஸ்ரேஷன்கள்

கல்லோயாப் பள்ளத்தாக்கிலே தற்காலிகமாக இம்மாதத்தில் ஐந்து பொலிஸ்ஸ்ரேஷன்கள் அமைக்கப்படவிருக்கின்றன. அங்குமட்டும் 300 பேருக்கு அதிகமான பொலிஸ்காரர்கள் கடமையாற்றுவார்கள். அம்பாறையிலே ஓர் றிசேவ் பொலிஸ் பட்டாளத்துக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பொலிசருக்கு உதவியாக இராணுவமும் ஆயத்தமாக அம்பாறையில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

### தெங்குப்பொருள் ஏற்றுமதி

இலங்கையிலிருந்து இவ்வருடம் கொப்பறா, தேங்காயெண்ணெய், தேங்காய்த்திருவல் முதலாம் தெங்குப்பொருட்களின் ஏற்றுமதி பெருமளவிலே குறைந்திருக்கிறது. இதுபற்றிய புள்ளிவிபரங்களைக் கவனிக்கும்போது இலங்கையின் வருமானம ஓரளவு வீழ்ச்சியடையும்போல் இருக்கிறது. தெங்குப்பொருள் உற்பத்தியிலும் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியைக் கவனிக்கும்போது ஏற்றுமதி மேலும்குறையுமென்றே நம்பப்படுகிறது. இந்தஏற்றுமதிக்குறைவால் வருமானவிழுகை ஏற்பட்டாலும் தேயிலை, றப்பர் ஏற்றுமதி அதிகரித்திருப்பதால் அதனைச் சமாளிக்க முடியுமென்று சொல்லப்படுகிறது.

### சகோதரருக்கு மரணதண்டனை

கே. முருகன், கே. செல்லையா, கே. சிதம்பரப்பிள்ளை எனும் சகோதரர்மூவரும், ரி. சிதம்பரப்பிள்ளையும் சேர்ந்து சென்றவருடம் ஆடிமாதம் 4-ந் திகதியன்று மீசாலையைச்சேர்ந்த சின்னக்குட்டி வேலுப்பிள்ளையைப் பொல்லுகளால் அடித்துக் கொலை செய்தார்களெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கானது, யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பெற்று, முதல்இருஎதிரிகளாகிய முருகன், செல்லையா என்னும் சகோதரர்கள் இருவரும் கொலைக் குற்றவாளிகளாகக் கண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். ஏனைய எதிரிகள் இருவரும் விடுதலையடைந்தார்கள்.

### புதியகுரவர்களின் வரவு

றோமாபுரியிலே உயர்தர வேதசாஸ்திரங்கள்கற்றுச் சென்ற மார்கழிமாதம் 22-ந் திகதியன்று குருப்பட்டம் பெற்றுக்கொண்ட வண. கிறிஸ்ரி அருள்தாசன் ஜுவக்கீம்பிள்ளை, O. M. I. சுவாமியவர்களும், வண. கிங்ஸ்லி புறோனே சந்தியாப்பிள்ளை Mis. Ap. சுவாமியவர்களும் நாம் முன்னர்தெரிவித்திருந்தபிரகாரம் சென்ற 20-ந் திகதி சனிக்கிழமை 'விக்றோறியா' எனும் கப்பலிலே கொழும்பு வந்து சேர்ந்தார்கள். அவ்வேளை துறைமுகத்திலே அவர்களின் பெற்றோரும், சுற்றத்தவரும் காத்துநின்று அன்புடன்வரவேற்று அவர்களின் ஆசிபெற்று மகிழ்ந்தார்கள். குரவர்கள் இருவரும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு றெயின்மார்க்கமாக யாழ்ப்பாணம்வந்து சேர்வார்களென அறிகின்றோம்.

## சுதேச வர்த்தமானம்

### குருமார் ஞானவொடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த அமலோற்பவ மரியநாயகி சபைக் குருமாரின் முதலாவது ஞானவொடுக்கம் நிகழும் ஆடிமாதம் 26-ந் திகதியாகிய நாளை வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி, அடுத்துநிகழும் ஆவணிமாதம் 2-ந் திகதி வெள்ளிக்கிழமைகாலை முடிபாகும். மகாவந். கிளாபோ மேற்றிராணியாண்டவர் ஞானவொடுக்க போதகஞ் செய்வார். இந்த ஞானவொடுக்கம் நன்மையாக நடைபெறத்தக்கதாய் மன்றாடிக்கொள்ளுமாறு விசுவாசிகள்சகலரும் பரிவாகக்கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

### மற்றோர் புதிய குருவானவர்

தம்பளையிலே ஓர்தோட்டத் துரையாய் இருந்துவருகிறவரான திரு. எச். வி. குக் அவர்களின் புதல்வரான வண. ஜேம்ஸ் குக், O. M. I.. சுவாமியவர்களும் றோமாபுரியிலே ஏழுவருடகாலம் உயர்தர வேதசாஸ்திரம்கற்றுச் சென்றவருடம் குருப்பட்டம் பெற்றபின் அங்கிருந்து விக்ரோறியா எனும் கப்பலிலே சென்ற 20-ந் திகதி சனிக்கிழமை கொழும்புவந்து சேரலாயினர். கண்டியிலுள்ள திறினிற்றிக் கல்லூரியிலே முன்னர் ஓர்கிறிக்கெற் கப்ரினாகவிருந்த தமதுதந்தையாரைப்போலவே இவரும் அதேகல்லூரியில் படித்து, கிறிக்கெற் கப்ரினாகவிருந்து ஹைட் தங்கவிருதை வெற்றிகொள்ளலாயினர்.

### உயர்ந்த பிறப்பு விகிதம்

இலங்கையிலே பிறப்புவிகிதம் மிக உயர்ந்துள்ளது. 850 பிள்ளைகள் தினமும்பிறக்க, 200 பேர் தினமும் இறக்கின்றனரெனப் புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாகச் சென்ற 17-ந் திகதியன்று கல்முனையில் நடைபெற்ற கூட்டமொன்றிலே தேசியசேமிப்பு இயக்கத்தின் உதவிக்கம்மிஷனரான திரு. ஏ. பி. குருசாமி அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அதனால், அரசாங்கம் தினமும் மேலதிகமாக 650 பேருக்கு உணவு கண்டுகொள்ளவேண்டிய பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதென்றும், இதற்காக நாட்டின்வளங்கள்யாவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்றும் அவர்கூறலாயினர்.

### பொலிஸ்பட்டாளம் வந்தது

ஆவணிச் சத்தியாக்கிரக இயக்கத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலே பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளின் முதல்நடவடிக்கையாக 200 பேருக்கு மேற்பட்டவர்களைக்கொண்ட பொலிஸ் பட்டாளமொன்று சென்ற 21-ந் திகதி றெயின்மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்திருக்கிறது. இதைத்தொடர்ந்து இன்னும்சில பொலிஸ்பட்டாளங்கள் வரலாமென்று கருதப்படுகிறது. ஏற்கனவே இங்குவந்த பொலிஸ்பட்டாளத்தினர் பகுதிபகுதியாகப் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள பலவேறு பொலிஸ் ஸ்ரேஷன்களுக்கும் அனுப்பப்பட்டுவருகிறார்கள். இவ்வருடங்களுக்குமுன் பொதுமக்களிடையே இங்குதிரட்டப்பட்ட விசேஷ பொலிஸ் பட்டாளத்தைச் சேர்ந்தவர்களும் சென்ற திங்கட்கிழமைகாலை யாழ்ப்பாணப் பொலிஸ்ஸ்ரேஷனுக்கு அழைக்கப்பட்டார்கள். இவர்களுக்கும் பயிற்சியளிக்கப்படும்போல்இருக்கிறது.

### அதிகமான றெயில்வேச்செலவு

நிலக்கரியின்விலை அதிகரித்திருப்பதால் றெயில்வேச்செலவும் அதிகரித்திருக்கிறது. சென்றவருடம் நிலக்கரிக்குக்கொடுத்த பணத்தைப்போல இருமடங்குபணம் இவ்வருடத்திலே கொடுபடவேண்டியிருக்கிறது. சென்ற 1956-ம் ஆண்டிலே ஒருதொன் 55 ரூபாவாகவிருந்த நிலக்கரியின்விலை இவ்வருடம் சென்ற சித்திரைமாத முதல் 93 ரூபாவாக அதிகரித்திருக்கிறதென்று றெயில்வேமனேஜர் கூறுகின்றார். அதனால் அதிகரித்திருக்கும் செலவைச் சமாளிப்பதற்காகப் போக்குவரத்துமந்திரி பாராளுமன்றத்திலே 76 லட்சத்து 50ஆயிரம் ரூபாவுக்கு ஒருஉபமான்யம் கேட்கவிருக்கின்றார்.

### காலநிலை

காற்று விழுந்துவிட்டது. மப்புமந்தாரம் அதிகமாகக் காணப்படுகின்றது. பட்டினங்கள், கிராமங்களிலெல்லாம் "இன்புளுவென்சா" எனப்படும் சளிச்சுரம் தீவிரமாகப் பரந்துகொண்டிருக்கின்றது. அதனால் அச்சுரங்கண்டவர்களால் — விசேஷமாகக் குழந்தைகளால் அரசினர் ஆஸ்பத்திரிகள், வெளிமருந்துச்சாலைகளும், பிரத்தியேக ஆஸ்பத்திரிகளும் முற்றிகையிடப்பட்டுவருகின்றன. அநேகமான வீடுகளில் மருந்துங்கையும், குடிநீருங்கையுமாக காணப்படுகின்றார்கள். இந்தச்சளிச்சுரங் காரணமாகப் பாடசாலைகளிலே வரவு விழுந்துகொண்டு வருகிறது. இரண்டொருபாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### காட்டுயானைக்குப் பலியானபெண்கள்

மீகொடைக் குடியேற்றதிட்டத்திலிருந்து ஏழுகமக்காரர் சென்ற செவ்வாய்க்கிழமை 12மைல் தூரமான அடர்ந்தகாட்டினூடாக வொகந்தோட்டை எனுமிடத்திலுள்ள சந்தைக்கு அதிகாலையில் சென்றபோது, உல்பத்தகமாக் காட்டிலிருந்து திடீரென வெளிகொண்டயானை ஒன்று தனது தும்பிக்கையால் ஒருமனிதனைப் பிடித்துத் தரையில் மோதியடிக்க எத்தனிக்கவே, அதன் பிடியிலிருந்து விலகிச் சிறிதுதூரத்தில்போய் விழுந்து ஒருவாறு உயிர்தப்பிக்கொண்டான். அதற்கிடையிலே அந்தயானை ஒரு பெண்ணைப் பிடித்துக் காலால் மிதித்துக்கொன்றுவிட்டு, மற்றொரு பெண்ணைப் பிடித்துக் கிழித்தெறிந்துவிட்டது. இவர்களில் ஒரு பெண்ணுக்கு எட்டுப் பிள்ளைகளும், மற்றப்பெண்ணுக்கு ஐந்து பிள்ளைகளும் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. எஞ்சிய நால்வரும் ஓடி ஒளித்துக்கொண்டார்கள்.

### சீனாவும் கடலட்டையும்

சீனாவோடு வர்த்தகப்பேச்சுவார்த்தைகள்நடத்துவதற்கென்று இலங்கையிலிருந்து ஓர்தூதுக்கோஷ்டி சென்றவாரம் பீக்கிங்நகர் சென்றிருக்கிறது. இந்தத்தூதுக்கோஷ்டி இலங்கைக்கடலட்டைகளை விற்பதற்கென்று சீனாவுடன் ஓர் ஒப்பந்தஞ் செய்துகொள்ள முயற்சிக்குமெனத் தெரியவருகிறது.

### வைத்திய அத்தாட்சிப்பத்திரம்

நோய்வாய்ப்படும் அரசாங்கஊழியர்கள் இனிமேல் 14 நாட்கள்வரை தேவைப்படும்விடுமுறைக்குப் பிரத்தியேக டக்றர்மாரிடமிருந்தும் ஆயுள்வேத வைத்திய அத்தாட்சிப்பத்திரங்கள் பெற்றுச் சமர்ப்பிக்கலாம். இதுவரை அரசாங்க வைத்திய அதிகாரிகளிடமிருந்தே அப்பத்திரங்களைப் பெறவேண்டுமென ஒழுங்கு இருந்தது.

### திரு. கே. எஸ். பிரகாசம்

மலாயாவிலே கோலாலம்பூரில் மத்தியமின்சாரசபைக் காரியாலயத்திலே உதவி அதிகாரியாய் இருந்துவருகிறவரான திரு. கே. எஸ். பிரகாசம் அவர்கள் குறுகியகாலவிடுமுறையிலே தமது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றார். இவர் யாழ்ப்பாணநகரிலே ஆசனக்கோவில்வீதியில் வசித்துவருகிறவரான பி. ஜே. கொன்ஸ்ரன்ரீன் தம்பதிகளின் மருகராவர்.

### வரவு–செலவுத் திட்டம்


எம். ஈ. பி. அரசாங்கத்தின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் நேற்றிரவு சனப்பிரதிநிதிகள் சபையிலே நிறைவேறியது. அதற்குச் சாதகமாக 49 பிரதிநிதிகளும், பாதகமாக 23 பிரதிநிதிகளும் வாக்களித்தார்கள். லங்காசமசமாஜகட்சி, சமஷ்டிக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி, யு. என். பி. கட்சிப் பிரதிநிதிகள் வரவு–செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தார்கள்.

### பிரதமரும், சமஷ்டித்தலைவர்களும்

செனற்சபையிலுள்ள பிரதமரின் காரியாலயத்திலே பிரதமருக்கும், சமஷ்டிக்கட்சித் தலைவர்களுக்குமிடையே நான்காம்முறையாகச் சென்றசெவ்வாய்க்கிழமை நடைபெற்ற சமரசப்பேச்சுக்கள் முந்தியமூன்று முறைகளிலும் மிகமிகத் திருப்திகரமாக நடைபெற்றனவென்றும், அதனால், அதிசம் திருப்திகரமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், பாஷைப்பிரச்சினை, பிராந்தியசபைப் பிரச்சினையாகிய இரண்டிலும் ஏறக்குறையச் சுமுகமானஉடன்பாடு காணப்பட்டுவிட்டதென்றும், மேலும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இன்றையசம்பாஷணைகளில் இருபாலாருக்குமிடையிலே இதுவரை இருந்துவந்த தப்பான அபிப்பிராயங்கள் நீக்கப்பட்டு விட்டனவென்றும், அவற்றால் வெற்றிக்கான நல்லசூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. அவைகள்பற்றிய விரிவான அறிக்கை இரண்டொருதினங்களில் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மருதமடுத் திருசேத்திரத்தின் ஆடிப்பெரிய மகோற்சவ காட்சிகள்



மருதமடுச் செபமாலை மாதாவின் அற்புத திருச்சுரூபம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும் உளங்கவர் காட்சி.



மருதமடுத்திருப்பதியின் ஆடிப்பெரிய மகோற்சவத்தின் போது அப்பதியில் சமுகமாயிருந்த கொழும்பு அதிமேற்றிராணியாரும், யாழ்ப்பாண மேற்றிராணியாரும், மகாவந். ஊளபோ மேற்றிராணியாரும் இப்படத்தில் காட்சியளிக்கின்றார்கள்.



மருதமடுச் செபமாலை மாதாவின் அற்புத திருச்சுரூபம்.



மருதமடுத் திருப்பதி ஆலயத்தின் தலைவாயில் மண்டபம். மகோற்சவ காலத்தில் இதிலேதான் பிரசித்த ஆராதனை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

● வத்திக்கான் சுவிஸ்காவலரின் தளபதியாக 46வயதுடைய தத்துவ சாஸ்திர பேராசிரியரும், சுவிற்சர்லாந்திலே லூசேண்நகரிலுள்ள காலாட்படைக்கலா சாலையின் தலைவருமான டக்றர் றொபேட் நுவெலிஸ்ற் அவர்கள் பாப்பரசராலே நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். சுவிஸ்காவலர்படை 1506-ம் ஆண்டு இரண்டாவது யூலியஸ் பாப்பானவரால் ஆக்கப்பட்டதுமுதல் அதன் 28-வது தளபதி இவராவர்.

● ஹொங்கொங்தீவிலுள்ள பிரான்சீஸ்கன் சபைக் குருமார் இருவருடகாலம் தொடர்ந்துவேலைசெய்து திருச்சுவிசேஷங்களைச் சீனப் பாஷையில் மொழிபெயர்த்து அச்சேற்றியிருக்கின்றனர். ஒன்பதுபுத்தகங்களாக அச்சேற்றப்பட்டுள்ள முழுவேதபுத்தகத்திலும் எட்டுப்புத்தகங்கள் பழையஏற்பாட்டை அடக்கியனவாகும்.

● லூர்துதிருப்பதியில் தேவதாயார் காட்சியளித்த நூறும்ஆண்டுவிழாவையிட்டு உலகின் நாலுபகுதிகளிலுமிருந்தே கோஷ்டிகோஷ்டியாக அங்குயாத்திரைசெய்வதற்கான ஆயத்தங்கள் ஏற்கனவே நடைபெறத்தொடங்கியுள்ளன. அத்திருப்பதிக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதற்கென்று இதுவரை ஆயிரம் விசேஷ றெயின்வண்டிகள் அமர்த்தப்பட்டிருக்கின்றன.

● பூமியின்வடதுருவம் கிறீன்லாந்தின் மேற்குக்கரையில்தான் இருக்கிறது. இதுவரை தவறுதலாகக் கருதப்பட்டதுபோலவும், பூகோளப்படங்களில் குறிக்கப்பட்டிருப்பதுபோலவும் அது வடகிழக்குக் கனடாவிலுள்ள எல்ஸ்மீர் லாந்தில் அல்ல. இவ்விரு இடங்களுக்கும் இடைத்தூரம் பலநூறுமைல். நவீன ஆராய்ச்சியால்கண்டறியப்பட்ட உண்மை இதுவாகும்.

● ஆபிரிக்காவிலே “கோள்ட் கோஸ்ற்” என அறியப்பட்டுவந்து, சமீபத்திலே சுதந்திரம்அடைந்த கானாநாட்டிலே 40வயதுடைய ஓர்அமெரிக்க காப்பிரிக்குரவரான வண. கேட்டிஸ் வாஷிங்ரன்சுவாமியார் தன்னந்தனிமையாக 50 மிஷன்கோவில்களையும், பாடசாலைகளையும் விசாரணைசெய்து வருகின்றார். என்றாலும் தற்போது இவர் மற்றோர்கோவிலையும் கட்டிவருகின்றார்.

● பிரான்ஸிலே பரேலே-மோனியலில் திருஇருதயஇராசாங்கம் ஸ்தாபகஞ்செய்யப்பெற்ற 50-ம் ஆண்டுநிறைவு விழாவைக் கொண்டாடுமுகமாக அடுத்து நிகழும் ஆவணிமாதம் 21-ந் திகதிமுதல் 23-ந்திகதிவரையில் மூந்தினங்களாகத் தொடர்ந்து திவ்வியபூசைகள் நிறைவேற்றுதற்குப் பாப்பரசரால்அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

By Courtesy of Thinakaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## வத்திக்கானும் ஆஸ்திரியாவும்

வத்திக்கானுடன் புதிதாக ஓர் உடன்படிக்கை செய்வதற்காகச் சமீபத்தில் நடைபெறவிருக்கும் சமரசப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்குத் தனது பிரதிநிதிகளின் கம்மிற்றிஒன்றை ஆஸ்திரியமந்திரிசபை அன்று செவ்வாய்க்கிழமை தெரிவுசெய்யலாயிற்று. ஆஸ்திரியாவுக்கும், வத்திக்கானுக்குமிடையே 1913-ம்ஆண்டுவரையில் ஓர் உடன்படிக்கை நடைமுறையில் இருந்துவந்தது. ஆனல், அவ்வருடம்ஹிற்லர்ஆஸ்திரியாவை அடிப்படுத்தியதும் அது ஒழிந்துவிட்டது. இரண்டாவதுஉலகயுத்தம் முடிந்து, அந்நாடு திரும்பவும் சுதந்திரம்பெற்றபோது, ஆட்சிப் பீடத்தில்அமர்ந்த சோஷலிஸ்தரான சமூகவாதிகள் அந்தஉடன்படிக்கையை அங்கீகரிக்கவோ, அன்றேல் புதிதாகஒன்றைச் செய்துகொள்ளவோ மறுத்துவிட்டார்கள்.

## பாடசாலைகளும் ஞானஒடுக்கமும்

வழமையான ஞானவொடுக்கங்களில் கலந்துகொள்ளுமாறு பிள்ளைகள் வேதபாடங்களுக்குச் சமுகமளிக்கத் தக்கதாய்ப் போலாந்திலுள்ள அரசாங்கபாடசாலைகளெல்லாம் மூன்றுதினங்களுக்கு மூடப்படவேண்டுமென்று போலிஷ்கம்யூனிஸ்த கல்விமந்திரியாரான . திரு. பியென்கோஸ்கி சமீபத்திலே உத்தரவிடலாயினர். இவ்விதமாகப் புராதனகத்தோலிக்க வழக்கம் ஒன்று போலாந்தபாடசாலைகளிலேதிரும்பவும்நடைமுறைக்கு வந்திருக்கிறது. மேலும்இவ்வருடம்வைகாசிமாதம் 3-ந்திகதியன்று போலாந்தின் தேசியப் பெருநாள் — அதாவது போலாந்தின் இராணியான தேவதாயாரின்திருநாள். இத்திருநாள் கொண்டாட்டங்கள் கம்யூனிஸ்த அரசாங்கத்தால் இம்முறை தடைசெய்யப்படவில்லை. முந்திய கம்யூனிஸ்த அரசாங்கத்தின் ஆட்சிகாலத்தில் தேசியக் கொடியை ஏற்றுகிறவர்கள் கடின தண்டனை விதிக்கப்படுவார்களென அச்சுறுத்தப்பட்டுவந்தார்கள்.

## திருச்சபைக்குச் சுதந்திரம்

பிராந்தியபகுதிகளிலே அரசாங்கம் சமயத்தைக் கண்காணிப்பதை நீக்கிவிடுவதற்குப் போலிஷ் புதியஅரசாங்கம் தீர்மானித்துள்ளது. சமயநிர்வாக மந்திரிகாரியாலயம் இனிமேலும் இருந்துவந்தபோதிலும் இந்தப்புதிய இயக்கமானது சமயசுதந்தரவிஷயமாய் எடுக்கப்பட்டிருக்கும் திட்டமான ஓர்நடவடிக்கையாகக் கொள்ளப்படுகிறது, அங்குமாகாண சங்கங்களிலும், பெரும்பிரிவுச் சங்கங்களிலும் சேவைபுரிந்துவந்த சமயநிர்வாக மந்திரிகாரியாலயத்தின் பிராந்திய அதிகாரிகள் திருச்சபை துன்புறுத்தப்பட்ட காலத்திலே குருமாருக்கும், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாருக்கும் பெருநட்டங்கள் செய்துவந்தார்கள். இவர்களெல்லாம் இனிமேல் நீக்கப்பட்டுவிடுவார்கள். கருதினல்விசின்ஸ்கிஆண்டவர் சென்ற ஐப்பசியிலே விடுதலைசெய்யப் பெற்றதைத்தொடர்ந்து இவர்களையும், இவர்களின்காரியாலயங்களையும் நீக்கிவிடவேண்டுமென்று போலிஷ்கத்தோலிக்கர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்கள்.

## பழையமாணவருள் அதிககுருமார்

பிரித்தானியிலே தனதுபழைய மாணவருள் அதிகமானகுருமாரைத்தந்த கல்லூரியாக மான்செஸ்றர்நகரிலுள்ள சென்பீட் கல்லூரி இன்றுபிரசித்திபெற்றிருக்கின்றது. நானூறுபேருக்குக் குறையாத இதன்பழையமாணவர்கள் இன்றுகுருமாராய் இருந்துவருகிறார்கள். இவர்களில் சுமார்250பேர் சால்போட்மேற்றிராசனத்தில் தொண்டாற்றிவருகின்றனர். ஏனையோர் பல்வேறு மேற்றிராசனங்களிலே பரந்தும், சந்நியாசசபைகளைச் சேர்ந்தவர்களாய் இருந்தும்வருகின்றார்கள்.

## உப்புச்சுரங்க ஆசனக்கோவில்

உலகின் மிகஅபூர்வமான ஆலயங்களில்ஒன்று கலம்பியாநாட்டைச்சேர்ந்த சிபக்குய்ரா எனுமிடத்திலே நிலத்தின்கீழ் 800அடி ஆழத்திலுள்ள உப்புச்சுரங்க ஆசனக்கோவிலாகும். திண்மையான உப்புப்பாறிலிருந்து இதனைத்துருவிச் செப்பனிட்டு அமைக்க ஆறுவருடங்கள்சென்றன. தற்சமையம் இது 5,000 பேரைக் கொள்ளப்போதிய அத்துணைபெரிதாய் இருக்கின்றது. ஒவ்வொன்றும் 400அடிநீளமும், 73அடிஉயரமுமான மூன்று தொடர்வழிகள் அதாவதுசுற்றுச் சாலைகள் இந்தஆசனக்கோவிலின் நடுப்பகுதி நாபிமண்டபங்களாய் இருந்துவருகின்றன. இதன்மச்சைத்தாங்கிநிற்கும் திண்மையான உப்புத்தூண்கள் 33அடி சதுரமானவைகள். இந்தஆசனக் கோவிலின் வாயிலுக்கு நிலத்தின் கீழ் ஒருமைல்தூரத்துக்குக் கார்கள்செல்லக்கூடியன. இந்தவாயிலிலே 200கார்கள் தங்கப்போதிய இடவசதியுண்டு.

## அமெரிக்க தேசீயதிருசேத்திரம்

வாஷிங்ரன்நகரிலே அமலோற்பவமரியநாயகிபேரால் தற்போது கட்டியெழுப்பப்பெற்றுவருகின்ற அமெரிக்கதேசிய திருசேத்திரமானது பத்துலட்சம்டலர் செலவில் அமைக்கப்படும் 316 அடிஉயரமான மணிக்கோபுரம் ஒன்றைக் கொண்டிருப்பதாகும். கலம்பஸின் "நைற்வீரர்களது கோபுரம்"என்று அழைக்கப்படவிருக்கின்ற இந்தமணிக்கோபுரமானது தங்கள் வைரயூபிலி விழாவைக் கொண்டாடுகின்ற இந்தநைற்வீரர்களின் ஓர்நன்கொடையாகும். ஐக்கியஅமெரிக்கதேசத்தில் இரண்டாவதாக அதிகம்உயர்ந்ததாகும். மகாஉந்நதமானது வாஷிங்ரன் ஞாபகசின்னமே. இத்திருசேத்திரம் உலகின்மகாப்பிரமாண்டமான பத்துஆலயங்களில் ஒன்றாகத் திகழவிருக்கின்றது.

## கருதினல்நியூமனின் சினிமாப்படம்

கருதினல்நியூமன்ஆண்டவரின் சீவியவரலாற்றையும், சீரிய தொண்டுகளையும் பரக்க அறியச் செய்யுமுகமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் சினிமாப்படம்ஒன்று முதன்முதலாகச் சென்றஆனி 23-ந்திகதியன்று பர்மிங்காம் நகரிலே, கருதினல் ஆண்டவர் அடியிட்டு நாற்பதுவருடகாலம் சிரேஷ்டராயிருந்த பிரத்தியேக வழிபாட்டுத் தலத்திலிருந்து சிலயார்தூரத்திலுள்ள சம்பிலிப்புவின் கலாசாலையில காண்பிக்கப்படலாயிற்று. இந்தப்படம் அவரின் ஆரம்பவாழ்க்கையை — அதாவது மூந்த ஒக்ஸ்வோட்சர்வகலாசாலையில் ஓர் கீழ்ப்பட்டதாரியாய் அவர் இருந்ததையும், பிந்த 1828-ம்ஆண்டு தமது 28-ம்வயதிலே அர்ச். மரியநாயகிசர்வகலாசாலைக் கோவிலின் அங்கிளிக்கன் சபைப் பாதிரியாராக நியமனஞ் செய்யப்பெற்றதையும் காண்பிக்கின்றது. இதற்குப் 17வருடங்களின்பின்னரே அவர் மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினர். அவரது பிரத்தியேகஅறையினதும், வழிபாட்டுத்தலத்தின் சிற்றாலயத்தினதும் காட்சிகள் அவர் சீவந்தராயிருந்த காலத்தில்போலவே இன்றைக்கும் இருந்துவரப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைக் காண்பிக்கின்றது. அவரது சாய்ந்தமேசையிலே அப்போதைய பிரித்தானிய பிரதமர் திரு. கிளாட்ஸ்ரன் அவர்களால் சந்மானிக்கப்பெற்றவிளக்கு இன்னுமே அதில்இருந்துவருகிறது. இந்தப்படம் பர்மிங்காம்நகர கத்தோலிக்கபில்ம் ஸ்தாபனத்தால் தயாரிக்கப்பட்டது.

## பரிசுத்தநாட்டின் சினிமாப்படம்

பரீஸ்நகரிலே வெள்ளைக்குருமார் பரிசுத்தநாட்டின் வர்ணச் சினிமாப்படம்ஒன்றைக் காண்பித்துவருகின்றனர். இருமணிநேரம் ஓடுகின்ற இந்தப்படமானது நமதுதிவ்வியகர்த்தரின் காலத்திலிருந்து நாடுபுறங்களில் பலஸ்தீன்நாடு மிகவும்அற்பமாற்றமே அடைந்திருக்கிறதென்பதைக் காண்பிக்கின்றது. அர்ச். சூசையப்பருடையதெனக்கொள்ளப்படுகிற ஓர் தச்சுத்தொழிற்சாலையும், கானநகரில் நிகழ்ந்ததைப்போலும்கலியாணஉற்சவங்களும், கலிலேயாக்கடலில் மீன்பிடிகாரர்செல்வதும், திவ்விய கர்த்தர் பெற்றுக்கொண்டது போன்ற ஆடம்பரமான பிரசித்தகொண்டாட்டங்களும் இப்படத்திலே அடங்கியவற்றில் சில காட்சிகளாகும். திவ்வியகர்த்தரின் காலத்துச் சூழலையும், சுற்றுடல்களையும் இறந்றமட்டும் நுட்பமாக இந்தப்படம்சிருட்டித்துக்காட்டுகின்றது.



## ஹங்கேரியிலே ருஷியாவின் அச்சம் — காரணம்?

### அங்கிருந்து உண்மை வெளியானமையே.

வெறுங்கையாய்நின்று ஹங்கேரியின் சுதந்திரத்திற்காய்ப் போராடிய ஹங்கேரியனிலும் சோவியற்தாங்கி மகாப்பலமுடையது. ஆனல், ஹங்கேரியிலே ருஷிய வெற்றியாளரின் மனதைக்கலக்கிவிட்டதென்ன? பிரதிமைப்படங்கள்மூலமும், ஐக்கியநாடுகளின்ஸ்தாபன அவதானிகளின் அறிக்கைமூலமும் உண்மைகள் அகிலமுழுவதும் வெளிவந்தமைதான். ருஷியசெஞ்சேனை சுதந்திரத்திற்காகப்போராடிய ஹங்கேரியமக்களை அடக்கி வெற்றிகொண்ட சம்பவமானது சந்தோஷகரமான ஓர்சம்பவம்அன்று. ஒருலட்சம் ஹங்கேரியஅகதிகள் தங்கள்நாட்டையும், தங்கள்சொத்துகள், பொருள்பண்டங்களையும், அநேகசந்தர்ப்பங்களிலே தங்கள் அன்புக்குரியவர்கள், அருமைபெருமையானவர்களையும் கைநெகிழ்ந்து, சுதந்திரத்தைநாடிப் பிறநாடுகளுக்குத் தப்பியோடியதே ருஷியர்களின் அடக்குமுறைகள் தாங்கமுடியாதன என்பதற்குத் தகுந்தஅத்தாட்சியாகும். சோவியற் இராணுவயந்திரப் ஹங்கேரியைத் திரும்பஅடிப்படுத்தி, மேலைத்தேசங்களின் பத்திரிகைகாரருக்கு அதன்எல்லைகளை மூடிவிட்டதுமுதல் அந்நாட்டிலிருந்து தப்பியோடிய ஹங்கேரிய அகதிகள் மேலேகாட்டியதைப்போன்ற அநேகபிரதிமைப்படங்களையும் தங்களுடன் களவாக எடுத்துச்சென்றிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

**பொதுக்கருத்து:** அணுச்சக்தி அமைதியான முறையில் ஆக்க வேலைக்குமாத்திரம் பயன்படுமாறு வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** ஓசியானியா தீவுகளில் உழைக்கும் வேதபோதகர்களுக்காக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
ஆடி மாதம் 25-ந் திகதி

# மாசில்லாத இருதயமாதம்

அமலோற்பவ மரியநாயகியின் மாசில்லாத இருதயப்பத்திக்கு நேரப்பெற்றஆவணிமாசம்பிறக்கவிருக்கின்றது. சத்திய திருச்சபைஅதிகாரிகள் பதின்மூன்று வருடகாலம் பரிசோதனைசெய்து உண்மையுள்ளதும், நம்பிக்கைக்குரியதுமெனநிச்சயித்தபாத்திமா திருப்பதிக் காட்சியின் போது 1917-ம்ஆண்டு ஆடிமாதம் 13-ந் திகதி தெளிவாக வெளிவந்தபிரகாரம், தேவதாயாரின் மாசில்லாதஇருதயப்பத்தி உலகிலே தாபிக்கப்படவேண்டுமென்று தேவனே திருவுளமாயிருக்கின்ருர். மனுமக்களைத் திகிலுறுத்திவரும் அவிசுவாசம், பேரின்பமோபொய், சிற்றின்பமேமெய் என்ற குருட்டுக்கொள்கை, சனசாகியங்களிடையேயுள்ள குரோதவைராக்கியம், பரநலத்தை உபேட்சித்துச் சுயநலம்ஒன்றையே அபேட்சிக்குங் குணதோஷம், சனசங்கார யுத்தக்குறிகள்முதலான அபாயங்கள் அகன்றொழிந்து நீதியும், பிறர்நேசமும், சமாதானமும் எங்கும் நிலவுதற்கு வேண்டியுள்ள சர்வவரப்பிரசாத மத்தியஸ்தியாகிய தேவதாயாரின் மன்ருட்டஒத்தாசையை இனிது அடைந்துகொள்ள உசிதஉபகரணமாக வெளிப்படுத்தப்பெற்ற அத்தாயாரின் மாசில்லாதஇருதயப்பத்தியானது நம்முள்ஒவ்வொருவரினதும், நமதுகுடும்பங்களினதும் லெளகீக, வைதீக இடுக்கண்கள் தீரவும், நமது பரிசுத்தமாதாவாகிய திருச்சபையென்னும் யேசுநாதசுவாமியின் ஞானச்சரீரத்தை ஊறுபடுத்துங் காயங்கள் ஆறவும் ஓர்பரமஅவுடதமாக உதவுமாதலால், இந்தப்பத்தியை நாம்அநுட்டித்துவரவேண்டும். மாதாவின் மாசில்லாதஇருதயத்துக் குகப்பானவிதமாய் இதனை அநுட்டித்தற்கு நாம்கையாளத்தக்க பக்திமுயற்சிகள்யாவை? பாத்திமாதிருப்பதிக்காட்சிவைபவத்திலேயே அவைகள் எவையென வெளிவந்திருக்கின்றன. முதன்முதலாக மாதாவின் மாசில்லாத இருதயப்படத்தை அல்லதுசுரூபத்தை நமதுவீட்டிலே பூச்சியமாகத் தாபித்துப் பூசித்து வணக்கஞ்செய்வது அவசியமாகும். அதன்மேல்,

**முதலாவது:** பாத்திமாநாயகி அப்போது ஏவியபிரகாரம் நமதுபரிசுத்தபிதா 12-ம்பத்திநாதர் திருச்சபைமுழுவதையும், மனுமக்கள்சகலரையும் மாசில்லாதமாதாவின் மகாபரிசுத்த இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்த வண்ணம் நாமும் நம்மையும், நமதுகுடும்பங்களையும் அதற்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்போமாக. நாம் துர்நெறிவிட்டு, நன்னெறிப்பட்டுப் பிள்ளைக்குரியநேசத்தைக் காண்பித்துவரின், மாதாவின்மாசில்லாத இருதயம் தாய்க்குரியநேசத்தோடு நமக்குஅடைக்கலம்அருளிவரும் என்பதற்கு ஐயப்பாடுண்டா?

**இரண்டாவது:** நாம்ஈடேறவும், பாவிகளை மனந்திருப்பி ஈடேற்றவும் செபவேண்டுதலும், ஒறுத்தல்முயற்சியாகிய மனப்பலியும் ஒப்புக்கொடுத்தல் வேண்டும். செபமாலையை ஏந்தியபிரகாரம் காட்சியளித்த செபமாலைநாயகி செபமாலையை எப்போதும் அடிக்கடியும் செபிக்கவேண்டும் என்று தம்மைக்காணும் பாக்கியம்பெற்றமூன்றுஇடைப்பிள்ளைகளிடமும் மீண்டும்மீண்டும் வற்புறுத்திக்கேட்டிருப்பதை அறிந்துள்ளோமே. தேவதிருவுளத்தால்நேரிடும் துன்பதுயரங்களையெல்லாம் தமது திருக்குமாரனுக்கு இருதயநோவுண்டாக்கும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், பாவிகள் மனந்திரும்புவதற்காகவும் ஒப்புக்கொடுக்கும்படியும் தாயார்கேட்டிருக்கின்ருர். "மன்ருடுங்கள், மேன்மேலும் மன்ருடுங்கள். பாவிகளுக்காக ஒறுத்தல்முயற்சி செய்யுங்கள், அவர்களுக்காக ஒறுத்தல்முயற்சிகளை ஒப்புக்கொடுப்பார் இல்லாமையினலே அநேகஆத்துமாக்கள் நரகத்துக்கு ஆளாகிருர்களே" என்று ஆகுலித்துக்கூறி, மூன்றுபிள்ளைகளையும்நோக்கி: "பாவிகளுக்காக உங்களை ஒறுத்துநடவுங்கள். "ஓ! என்யேசுவே! இதைநான் உமதுநேசத்துக்காகவும், பாவிகள் மனந்திரும்பும்படியாகவும், மரியாயின்மாசில்லாத இருதயத்துக்குச் செய்யப்படுந் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும் ஒப்புக்கொடுக்கிறேன் என்று அடிக்கடி சொல்லிவாருங்கள்" என்றும் புத்திபுகட்டியருளினர்.

**மூன்ருவது:** தற்போது கன்னியாஸ்திரியாகவிருக்கும் லூசியா என்ற சிறுபெண்மணிக்குத் தெரிவித்துக் கேட்டுக்கொண்டதை அநுசரித்தல்வேண்டும். "என்பிள்ளையே, மனிதருடைய அவநன்றியாலும், தூஷிப்பினலும் சணத்துக்குச்சணம் உள்ளிறங்கும்முட்களினலே முற்றும் ஊடுருவப்பட்டுள்ள எனதுஇருதயத்தைப்பார்; நீயாவது அதற்கு ஆறுதல்வருவிக்கப் பிரயாசப்படுவாயாக; நான் இப்போதுஅருளும்வாக்குத்தத்தத்தையும் மனிதருக்குத் தெரிவிப்பாயாக. தொடர்பாக ஐந்துமாசங்களிலே முதற்சனிவாரந்தோறும் எனக்கு நிந்தைப்பரிகாரஞ்செய்யும் நோக்கமாகப் பாவசங்கீர்த்தனத்தினுற் தங்களைச் சுத்திகரித்துத் திவ்வியநன்மை உட்கொள்ளுகிறவர்களும், காரணிக்கத் தேவஇரகசியத்தைத் தியானித்துச் செபமாலைஓதி ஒருகால் மணிநேரத்தை என்னேடுபோக்குகிறவர்களுமாகிய சகலருக்கும் அவர்களின் இரட்சணியத்துக்கு அவசியம்வேண்டிய வரப்பிரசாதங்களைஅருளி அவர்களின் அந்தியவேளையில் ஒத்தாசைபுரிந்தருளுவேன்" என்று வாக்குத்தத்தம்பண்ணியருளினர். பத்தியுள்ளஆத்துமாக்கள் தொடர்பாக ஐந்துமுதற்சனிக்கிழமைதோறும் மாத்திரமோ, வருடம் பன்னிரண்டுமாதச் சனிக்கிழமைதோறுமே இந்தப்பத்திமுயற்சியை அநுட்டித்து மாதாவின் மாசில்லாத இருதயத்துக்கு ஆறுதல்அளிக்க வருந்திவருவார்கள்.

**நான்காவது:** எங்கள் ஆபத்து அவசியங்களிலே பிள்ளைக்குரிய நம்பிக்கையுடன் மாதாவின் மாசில்லாதஇருதய அடைக்கலத்தைத்தேடிப் பக்திநிலைமையாய் வேண்டிக்கொள்வோமாக. இவ்வண்ணம்வேண்டிக்கொள்வாருக்கு ஆச்சரியகரமான அருள்கிடைப்பதை மெய்ப்பிக்கும் உண்மையில்ஊன்றிய சம்பவங்கள் எத்தனையோநிகழ்ந்துள்ளன.

**ஐந்தாவது:** மாசில்லாதஇருதய வணக்கமாசத்தையும், மாதாவின் மோட்சாரோபணத் திருநாளை அடுத்து 22-ந்திகதிவரும் மாசில்லாதஇருதயத்தின் திருநாளையும் வருடந்தோறும் பக்திச்சிறப்பாகக் கொண்டாடிவருவோமாக!

---

# அங்கும் இங்கும்

### பிரதமரின் வீரவாள்

"அன்று துட்டகைமுனுமன்னன் தீர்க்கவேண்டியிருந்த பிரச்சினைகளிலும்பார்க்கப் பெரிய பிரச்சினைகளை இன்றுநான் தீர்க்கவேண்டியிருக்கின்றது. ஆனல், துட்டகைமுனுமன்னனுக்கு இருந்தஎதிரிகளைவிட எனக்கு ஏராளமான எதிரிகள் எல்லாப்பக்கத்திலும் உண்டு. ஆனல், தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளப் பேச்சுவார்த்தை முதலாம் சமாதானவழிகளை உபயோகிப்பேன். ஆயுதப்படைகளை உபயோகிக்கும்சக்தியும், அதிகாரமும் எனக்கு உண்டு. ஆனல், நான் அவைகளை உபயோகிக்கமாட்டேன். எனதுவீரவாள் என்மனேநிடந்தான். எனது நோக்கம் எங்கள்உரிமைகளைப் பாதுகாப்பதும், பிறரை இம்சைப்படுத்தாமல் இருப்பதுந்தான்."

**பிரதமர் பண்டாரநாயகா**

### இது முழுப்பொய்

"கம்யூனிஸ்தசீனு தேவலோகத்துக்குச்சமமாக விளங்குகிறதென்று இங்குள்ள கம்யூனிஸ்தார்கள் கூறுகின்ருர்கள். ஆனல், இது முழுப்பொய்யென்று நான் சொல்லுகிறேன். அங்கு விவசாயத்துக்காக மக்களுக்கு நிலம் பங்கிடுசெய்யப்பட்டுள்ளது உண்மைதான். ஆனல், ஒருகுடும்பத்துக்கு ஒருஏக்கரில் ஆறில் ஒருபங்குதான் கொடுக்கப்பட்டுள்ளது."

**டக்றர் என். எம். பெறேரு,**
எதிர்க்கட்சித்தலைவர்

### மொழிப்பிரச்சினையும் பிரசாஉரிமையும்

"தோட்டப்பகுதிகளில் வசிக்கும் தமிழ்ப்பேசும்மக்கள் தன்மானத்துடன் வாழக்கூடியதாக அடிப்படை உரிமைகள் அருளப்பட்டாலன்றி மொழிப்பிரச்சினைக்கு ஒருமுடிவுகாண முடியாது. இலங்கைவாழ் இந்தியரின் பிரசாஉரிமைப் பிரச்சினையைத் தமிழரசுக்கட்சி விட்டுக்கொடுத்துவிடுமென்று ஒருசிலர் கருதுவதாகத்தெரிகிறது. இந்தப்பிரசாஉரிமைப்பிரச்சினை தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. இலங்கைவாழ் இந்தியர்களுக்குப் பிரசாஉரிமை பெற்றுக்கொடுப்பது தமிழரசுக்கட்சியின் முக்கிய இலட்சியங்களில் ஒன்று. இதை நாம் என்றும் மாற்றப்போவதில்லை."

**டக்றர் ஈ. எம். வி. நாகநாதன்**
தமிழரசுக்கட்சிப் பொதுக்காரியதரிசி

### அவரால் முடியாதகாரியம்

"பிரதமர் பண்டாரநாயகா தமிழரசுக்கட்சியின் உத்தேசசத்தியாக்கிரகம் சம்பந்தமான சிலஉண்மைகள்பற்றித் தமது நாட்டுவாசஸ்தலமாகிய 'ஹொரகொல்லை'யில்கூடி விவாதிப்பதற்குப்பதிலாக அவர் யாழ்ப்பாணக்குடாநாட்டிற்குச்சென்று அங்குள்ள தமிழ்த்தலைவர்களோடு விவாதிக்கவேண்டும். ஆனல், இது அவரால் முடியாதகாரியமாயிருக்கிறது."

**டக்றர் கொல்வின் ஆர். டி சில்வா**
லங்கா சமசமாஜகட்சிப் பிரமுகர்

### நாடு முன்னேருது

"சிங்களமக்கள் தமிழுக்குத் தகுதியான அந்தஸ்தளிக்க மறுத்தபோதிலும் உண்மையாகஅவர்கள் தமிழையோ, அன்றேல் தமிழரையோ வெறுத்து நாட்டைமுன்னேற்றமடையச்செய்துகொள்ள முடியாதுஎன்பதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்."

**திரு. கே. எஸ். அருணந்தி,**
முன்னைநாள் உதவிவித்தியாதிகாரி

### இந்தச்சூழ்நிலை இருக்கும்வரை

"ஜனநாயகம்பற்றிப் பேசும்அரசாங்கம் தமிழ்மக்களை நிர்க்கதியான ஓர்சமுதாயத்தினராக்கி விட்டது. தமிழ்ப்பேசும்மக்கள் ஏமாற்றமும், அதிருப்தியும் அடைந்தவர்களாய்ச் சொந்தநாட்டிலேயே வாழுஞ்சூழ்நிலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நாட்டுமக்களில் பிரதான மானவர்களாய் விளங்கும் தமிழ்ப்பேசும் மக்களிடத்தில் இந்தச்சூழ்நிலை இருக்கும்வரை அரசாங்கம் முன்னேறவோ, பொருளாதாரஸ்திரம் ஏற்பட்டுப் பலமடையவோ, அன்றேல் அமைதிநிலவிச் செல்வபூமியாக இந்தஇலங்கைவிளங்கவோ முடியாது."

**திரு. வி. ஏ. கந்தையா,**
ஊர்காவற்றுறை, எம். பி

### உரிமைக்காகப் போராடுகிருர்கள்

"நமதுநாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல்நெருக்கடியில் சகிப்புத்தன்மையும், புனிதமும் இன்றியமையாதன. தமிழர் தங்கள் உரிமைக்காகப் போராடுகிருர்கள் என்பதைப் புத்ததர்மத்தைச் சரிவரப்படித்த எவரும் மறுக்கமாட்டார்கள். இன்று பிரதமருடன் சமஷ்டிகட்சி நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் சுமுகமாகத்தீர்ந்து நாட்டிலே அமைதி நிலவவேண்டுமென நான் புத்தபகவானைத் தினமும் பிரார்த்திக்கிறேன்."

**புத்தகுரு, தர்மபாலா தேரோ**

---

● லண்டன்நகரிலே ஓர்காலம் கடற்படை ஆகாயவிமானியாயிருந்த 32வயதுடைய மிக்கேல் ஹெரைசன் என்பவர் தனது மரணசாதனத்திலே தான்இறந்தபின் இந்தஉலகிலே தன்னைப்பெரிதும் ஆனந்திக்கச்செய்த தனதுகண்களை ஆராவதுஒருபிள்ளை உலகின் அதிசயகாரியங்களைக் கண்டுகொள்ளஉதவியாக உபயோகிக்க வேண்டுமென எழுதியிருந்தார்; சமீபத்திலே இறந்துபோனஇவர் தனது உடலை ஆராய்ச்சிமுகாந்தரங்களுக்கென்று ஓர்ஆஸ்பத்திரிக்கு விட்டுப்போயிருக்கிருரென்று லண்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த இருதயத்தைக் காப்பாற்றுங்கள்

— V. M. Joseph —

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதுநிகழ்ந்தது 1320-ம் ஆண்டு. ஆனால், கி. பி. 33-ம்ஆண்டின் பாஸ்காப்பண்டிகையன்று இதேபோன்ற சம்பவத்தையே எமதிரட்சாபெருமான் செய்திருப்பதை நாம்காண்கின்றோம்அல்லவா. அன்றுவியாழக்கிழமைசாயந்தரம் அப்போஸ்தலருடன் கடைசிஇராப்போசனம் அருந்தும்பொழுது எமதுஆண்டவர்செய்ததுஎன்ன? தாம்அன்றைக்கே யூதர்கையால் பிடிபடவிருப்பதையும், தம்மால்உண்டாக்கப்பட்ட மனிதருக்காக நிஷ்டூரபாடுபட்டு மறுநாள் மரணிக்கவிருப்பதையும் அவர் நன்கு அறிவார். பரலோகத்திலிருந்து பூலோகத்திற்குவந்து பாவத்திற்கும், நரகத்திற்கும் அடிமைளான மனுமக்களை இரட்சிக்க அவரைத் தூண்டியதென்ன? அவர் மனிதர்பால் கொண்டிருந்த வரையறுக்கமுடியாத அன்பன்றோ! இந்தஅன்பின்சாயல் தானே அவருடையதிருஇருதயம்! இந்தஅன்பைத் தமது உயிர்நீங்கும் வரை காண்பித்திருந்தால் போதாதா? தேவகுமாரனுக்கு அதுபோதாமல் இருந்தது. உலகமுடிவுபரியந்தம் தமதுஅளவறுக்கப்படாத அன்பை மனுமக்கள்மேற் சொரிந்தாலல்லாது அவருடையமனம் சாந்தியடைவது சாத்தியமல்லஎன்பதை அவர்அறிவார். ஆதலால்அவர் அப்போஸ்தலர்களின் கால்களைக்கழுவித் துடைத்தபின்பு அப்பத்தைஎடுத்து ஆசீர்வதித்துப்பகிர்ந்து அப்போஸ்தலருக்குப் பங்கிடுபண்ணி, "இதைப் புசியுங்கள், இதுஎன்சரீரமாய் இருக்கின்றது" என்றும், பாத்திரத்தை எடுத்து ஆசீர்வதித்து அவர்களுக்குக் கொடுத்து "இதிலே பானம்பண்ணுங்கள், பாவப்பொறுத்தலின் நிமித்தம் அநேகருக்காகச் சிந்தப்படும் புதிய ஏற்பாட்டின் என்இரத்தம் இது" என்றும், இதை "என்நினைப்பிற்காகச் செய்யுங்கள்" என்றும் சொல்லித் திவ்வியநற்கருணையை உண்டாக்கி, உலகம் முடிவுபரியந்தம் எங்களுடனேஇருக்கும் மார்க்கத்தைத் தேடிக்கொண்டார். தினமும் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றப்படும்போது மேற்கூறிய தேவவசீகர வார்த்தைகளையே குருவானவர் சொல்லுகிறார்என்பதும், உடனே அப்பமும், இரசமும் எமதுஇரட்சகரின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகின்றனஎன்பதும் விசுவாசசத்தியம்.

ஆனால், "என்நினைப்புக்காகச் இதைச்செய்யுங்கள்" என்று எமது இரட்சகர் கொடுத்தகட்டளையை நன்குசிந்திக்குங்கால் நாம் என்ன விளங்கிக்கொள்ளுகின்றோம். அத்தருணத்தில்தானே எமதுஆண்டவர் தமதுதிருஇருதயத்தை — அதாவது தமதுபரிபூரணமானஅன்பைப் பூமியின்எட்டுத்திக்குகட்கும், பதினாறு கோணங்கட்கும் வீசிஎறிந்துவிட்டு, அவ்வன்பை உலகமடங்கலுமுள்ள எல்லாச்சாதிசனங்கட்கும் பகிரங்கப்படுத்துமாறு தமதுஅப்போஸ்தலரை ஏவிவிட்டார். "என்நினைப்புக்காக இதைச்செய்யுங்கள்" என்றபோது தாம் மனுமக்கள்மேல் வாரியிறைத்த அன்பை, தமதுநினைப்புக்காக அப்போஸ்தலர்கள்கூடியிருந்த ஜெருசலேம் பட்டணத்தில்மாத்திரம் தெரியப்படுத்துவதை அவர்விரும்பவில்லை. உலகமடங்கலும் பகிரங்கப்படுத்த வேண்டுமென்றேஆசித்தார். அவரின் விருப்பிற்கிணங்க, அப்போஸ்தலரும், அவர்களைப் பின்தொடர்ந்துவரும் மேற்றிராணிமாரும், குருமாரும் தூயஆவியினாலே தூண்டப்பெற்றவராய் உலகமடங்கலும் சென்று சத்தியமறையைப் போதித்துவருவதின் பயனாகத் தற்போது திவ்வியபூசைப்பலியானது உலகெங்கணும் ஒப்புக்கொடுக்கப்பட்டு எமது ஆண்டவரின் வேண்டுகோள் நிறைவேறுவதைக் காண்கிறோம்.

ஆனால், இவ்வளவுஅன்புடன் தம்மையே அர்ப்பணமாக்கினஎமதுஆண்டவரின்— தினந்தோறும் எங்கள் ஆலயங்களிலே பலியாக்கப்படும் எமதுஆண்டவரின் திருஇருதயமானது எங்கள் கால்களின்கீழே மிதிபடுவதென்றால், அதிலும்பார்க்கத் துக்கமும், வெட்கமும்நிறைந்தசம்பவம்வேறெதுவுமுண்டோ? மனிதனை புறாவின் இருதயம் சத்துராதிகளின் மிதிக்குள் அகப்பட்டுக்கிடந்தது அன்று. இன்றோ தேவனாகிய எமது இரட்சகரின் திருஇருதயம் அவரின் பிள்ளைகளாகிய எங்கள்கால்களுக்குள் நசுங்குண்டு கிடக்கின்றது. எங்கள்இரட்சகர்பெருமானின் கற்பனைகட்கமையாது பாவத்தில்விழும் ஒவ்வொரு சணமும்—அதுஎப்படிப்பட்ட பாவமாயிருந்தாலும்சரி— அவருடைய அன்புவழியும் இருதயத்தைமிதித்து அவசங்கை பண்ணுகின்றோம்என்பது முக்காலும்உண்மை.

"என்மகனே! மகளே!! ஈட்டியால் குத்தித் திறபட்டுக் கடைசித்துளி பரியந்தம் இரத்தம்சிந்தி உன்னை நரகத்தில்நின்று மீட்டெடுக்க அரும்பாடுபட்ட என்இருதயத்தை இதோ பார்! இந்தஅன்பின்இருதயம் உனக்காக என்னத்தைச் செய்யாமல்விட்டதால் உனதுகாலின்கீழ் அதைமிதிக்கின்றாய்என்று கல்லையும்கரையச்செய்யும் துயருடன் எங்கள்ஒவ்வொருவரையும் எங்கள்இரட்சகர் கேட்கின்றார். எங்களால் அவருக்குமறுமொழி சொல்ல முடியுமா? முடியாது. ஆனால், அவருடையபுண்பட்ட இருதயத்தின்கவலையை நீக்கமுடியும். அத்துடன் நித்தியமோட்ச சம்பாவனையைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ளவும் முடியும். எவ்வாறென்று கேட்கின்றீர்களா? ஒன்பதுமாசத்தின்முதல்வெள்ளிக்கிழமைப்பத்தியை அனுசரித்துவருவோமாக! அன்று நற்கருணைபெற்று எமதுஆண்டவரின்புண்பட்டஇருதயத்துக்கு நிந்தைப்பரிகாரமாக ஒப்புக்கொடுப்போமாக. இதனால் எமதுஇரட்சகருக்கு மனஆறுதலை உண்டாக்குவதுடன் மோட்சம்சேரும் பிரயாணச்சீட்டையும் பெற்றவர்களாகிவிடுவோம். ஆதலால் தாமதம்வேண்டாம்.

---

● சென்ற 16-ந்திகதி உலாந்த நியூகினியாவுக்கப்பால் கடலிலே உலாந்த ஆகாயப்பிரயாண விமானமொன்று தீப்பிடித்து அடித்துக்கொண்டுவிழுந்தமையால் அதிலேசென்ற 57பிரயாணிகள் உயிர்துறந்தார்கள். 12பேர் அதிர்ச்சியோடும், எரிகாயங்களோடும் உயிர்தப்பிக்கொண்டார்கள். பிரயாணிகளில் அதிகமானோர் இந்தோனீசியாவிலிருந்து ஒல்லாந்துக்குத் தங்கள்குடும்பங்களுடன் திரும்பிய உலாந்தஅதிகாரிகளே.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

# புதியகுரவர்களின் முதற்பூசை

ரோமாபுரியிலிருந்து சென்றசனிக்கிழமை இலங்கைவந்துசேர்ந்த இருகுருப்பிரசாதிகளிலும் வண. கிறிஸ்ரி அருள்தாசன் ஜுவக்கீம்பிள்ளை சுவாமியவர்கள் நாளைநின்றுவரும் 27-ந் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்குப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே தமது முதற்பூசையாகப் பெரியபாடற்பூசை நிறைவேற்றுவார். அதன்மேல் சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் ஓர்பொது வரவேற்பு நடந்தேறும். அதைத்தொடர்ந்து காலை 9-30 மணிக்குக் குருசோவீதியிலுள்ள அவர் பெற்றோரின்இல்லத்தில் ஓர்வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

வண. கிங்ஸ்லி புறுனோ சந்தியாப்பிள்ளை சுவாமியவர்கள் அடுத்து வரும் 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே தமது முதற்பூசையாகப் பெரியபாடற்பூசை நிறைவேற்றுவார். அதனைத்தொடர்ந்து சம்பத்திரிசியார் கல்லூரி வீதியிலுள்ள அவரதுபெற்றோரின் இல்லத்திலே ஓர்வரவேற்புஉபசாரம் நடைபெறும்.

---

## ஸ்பெயின் முடியரசாகுமா?

தற்போது ஸ்பானியஅரசாங்கதலைவராக இருந்துவருகின்ற ஜெனறல் பிரான்சிஸ்கோ பிருங்கோ அவர்கள் மரணமடையும்போது, அன்றேல் அதிகாரபதவியிலிருந்து விலகும்போது ஸ்பெயினிலே திரும்பவும் முடியரசு ஸ்தாபிக்கப்படுமெனச் சென்ற 16-ந்திகதியன்று ஸ்பானியபாராளுமன்றத்திலே அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாய்த் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. ஜெனறல்பிருங்கோவின் காரியாலயபொறுப்பாளியாய் இருந்துவருகின்ற மந்திரியான செனியோர் லூயிஸ் பிளாங்கோ அன்று பாராளுமன்றத்தில் பேசியபோது, இந்தமுடியாட்சியானது பாரம்பரியமும், கத்தோலிக்கமுமாயிருந்து ஆட்சியின்தத்துவங்களுக்குப் பிரமாணிக்கமாகச் சேவைபுரிவதாகுமெனச் சனப்பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கலாயினர். ஸ்பெயினின் அடுத்த அரசர் 19வயதுடைய ஜுவான் கார்லோஸ்இளவரசராய் இருப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. இவர் ஸ்பானியசிம்மாசனத்துக்கு உரிமைபாராட்டிநிற்பவரின் புதல்வரும், ஸ்பானியதேச கடைசிஅரசரான 13-வது அல்போன்சோமன்னரின் பௌத்திருமாவர். இளவரசரின் குடும்பத்தினர் அஞ்ஞாதவாசராய்த் தற்போது போர்த்துக்காலில் சஞ்சரித்துவருகின்றனர். இளவரசர் சறகோசாவிலுள்ள ஸ்பானியஇராணுவகழகத்திலே இருவருடப்பயிற்சியைத் தற்போதேமுடித்திருக்கின்றார். அடுத்தகார்காலத்திலே இவர் ஸ்பானியகடற்படைக் கலாசாலையில் சேர்ந்துகொள்வார். தற்போது 64வயதுடையவரான ஜெனறல்பிருங்கோ அவர்கள்கடந்தஇருபதுவருடகால அதிகாரபதவி வகித்திருக்கின்றார்.

## வெடிக்கப்பட்ட அணுஆயுதங்கள்

அணுஆயுத வல்லரசுகளான பிரித்தானி, அமெரிக்கா, ருஷியாமூன்றும் இதுவரை சுமார்பத்துக்கோடிதொன் வெடிமருந்துக்குச்சமமான அணு, சலவாயுஆயுதங்களை வெடித்துள்ளன. யுத்தம்முடிந்ததிலிருந்து இம்மூன்றும் நடத்தியுள்ளபரிசோதனைகளில் செலவானவெடிமருந்தின் மதிப்பைப் பன்னிரண்டுஆண்டுகளுக்குமுன் பதிவுசெய்த அணுக்கதிர்இயக்கத்துடன் இப்போதைய கதிரியக்கஅளவை ஒப்பிட்டுக் கணக்கிட்டிருக்கிறார்கள். மூன்று அணுஅரசுகளும் குறைந்தது பத்துப் பெரியசலவாயுக்குண்டுகளும், நூற்றுக்குஅதிகமான சிறுஅணுஆயுதங்களும் வெடித்திருக்கின்றன. இத்தனை குண்டுகளும் வெடித்ததால் உண்டானசக்தி, இரண்டுகோடிதொன்நிலக்கரியைச் சேர்த்தாற்போலஎரித்தால் எவ்வளவுசக்திபிறக்குமோ அதற்குச் சமமாகும். கடைசியாகவெடித்த சலவாயுக்குண்டு ஒருகோடிதொன்வெடிமருந்துக்குச் சமமான 'அதிர்ச்சித்திறன்' அல்லது 'வெட்டுச்சக்தி' படைத்தது. ஹிரோஷிமாவில்போட்ட குண்டைக்காட்டிலும் 500மடங்கு அதிகசக்திவாய்ந்தது. இதுவரை வெடித்த எல்லாஅணுகுண்டுகளும் சேர்ந்து மொத்தமாகச்சுமார் ஐந்துதொன் அதிவீரியக் கதிரியக்கத்தூசியைக் காற்றுமண்டலத்தில் பரப்பியுள்ளன. எல்லாம் மனிதவாழ்வுக்குப் பல்வேறு அளவுகளிலே தீங்கிழைப்பனவாகும்.

---

## யாழ்ப்பாண - மலையாளப்புகையிலை

இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனான திரு. கண்டேவியா அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை விருந்தினர்கள் விடுதியிலே தங்கியிருந்தபொழுது யாழ்ப்பாண-மலையாளம் புகையிலை வர்த்தகப்பிரதிநிதியான திரு. கே. சிவகுரு அவர்கள் அவரைச் சந்தித்து, பரம்பரையாக யாழ்ப்பாண— மலையாளப் புகையிலை வர்த்தகத்தை நம்பிப் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட கமக்காரர் இந்திய—இலங்கைப் புகையிலை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமையால் அனுபவிக்கும் கஷ்டங்களையும், மலையாளப் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட சுமார் 5,000 கமக்காரரும், அவர்களைச் சேர்ந்தவர்களும் இதனால் பாதிக்கப் பட்டிருப்பதையும், இலங்கை அரசாங்கம் இவ்வருடம் தைமாதத்திலே இப்புகையிலை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வாக்குறுதி அளித்திருந்ததையும், ஆனால், அதன்பின்னர் இதுசம்பந்தமாக எதுவும்செய்யாதிருப்பதையும் தெரிவித்து, ஆகவே, யாழ்ப்பாண—மலையாளப் புகையிலை வர்த்தகம் கஷ்டமின்றித் தொடர்ந்து நடைபெற உதவிபுரிய வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டார். ஹைகம்மிஷனர் அளித்தபதிலிலே, "மலையாளப் புகையிலை வர்த்தக விஷயமாய் என்னாலான உதவியெல்லாஞ்செய்யத்தயாராயிருக்கிறேன்; ஆனால், இலங்கை அரசாங்கம் காலதாமதமின்றி இப்பிரச்சினையை இந்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்க யாழ்ப்பாணக் கமக்காரர் செய்யவேண்டுமென விரும்புகிறேன்" எனக் கூறினார்.

---

**St. Andrews Missal**

**in Various Sizes. Eng. & Latin**

1. Daily Missal with Vespers for Sundays & Feasts Gilt Edges
2. Daily Missal Gilt Edges
3. ,, ,, Red ,,
4. ,, ,, Junior Edition.

*Please Apply to:*

**The Manager,**
**St. Joseph's Catholic Press,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் கொடுத்துவைத்தவள்!

— T. S. இராஜன் —

மதுரைமாநகர் இராணிவீதியிலே, வானளாவும் அரண்மனைபோன்ற வீடுகள் மத்தியிலே ஓர்பழைய ஓட்டுவீடு இருந்தது. யாவருக்கும் பொதுச் சொத்துப்போல அதன்கதவு திறந்து கிடந்தது. காலைவேளை. பெண்கள் தண்ணீர்தெளித்து வாசலில் கோலமிட்டுக்கொண் டிருந்தார்கள். அவ்வேளை ஓர்நாகரிகயுவதி கையிலே பையும், குடையுமாய்ப் பலவீடுகளில் விசாரித்துக் கடைசியாக அவ்வீட்டினுள் நுழைந்தாள். தெருவிலுள்ள அத்தனைகண்களும் அந்த நாரிமணியை ஊடுருவி நோக்கின.

"வா, மரகதம்! உன் பள்ளித்தோழியின் நினைவு இன்னுமா உனக்கு இருக்கிறது?" என்று சிரித்துவரவேற்றாள் எலும்புந்தோலுமாய் ஓர்பழைய கிழிந்தபாயில் உருமாறிக்கிடந்த எஸ்தர்.

"இப்படியா உன்னைக்காண நான் கொடுத்துவைத்தேன்? இது கல்லூரி வாழ்க்கைக் கனவுகளின் எதிரொலியா எஸ்தர்? உன்கதைஅத்தனையும் கேள்விப்பட்டேன்; நீ இத்தனை நிர்மூடமாய் இருப்பாயென்று அன்றுநான் கனவிலும் கருதியதில்லை; கருத்துக்கு ஒவ்வாக் கணவனுடன்வாழ. உன்தலையில் என்னதான் எழுதியிருக்கிறது? உனக்கென்ன இளமையில்லையா? வனப்பில்லையா? படிப்பில்லையா? ஓர் வேலைபார்த்து இந்தஒருசாண்வயிற்றை வளர்க்கமுடியாதா? உத்தரவுகொடு, இப்பொழுதே ஒரு வழக்கறிஞரை அழைத்துவருகிறேன்; விவாகரத்திற்கு மனுச்செய்துவிடுவோம்; பிறகு என்னுடன் வந்துவிடு; உன்னை ஓர்இராசகுமாரிபோல் ......!"

"மரகதம்! எல்லாம் பேசித்தீர்த்துவிட்டாயா? அல்லது இன்னும் ஏதாவது பாக்கியிருக்கிறதா?" என்றாள் எஸ்தர்.

"ஹாஸ்யத்திற்கு என்ன குறை? உன்வாழ்வில்தான் அந்தஇன்பம் சுரக்கவில்லை ......!"

"ஏதோ நிழல்தட்டுகிறதே, யார் வருகிறதென்று பார் மரகதம்"? என்றாள் எஸ்தர்.

"ஒருவருமில்லை; உன் கணவன் இப்பொழுது வரவேண்டும், நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகும்படி நான்கு வார்த்தைகள் கேட்கவேண்டுமென்று இருக்கிறது எனக்கு ... ..." என்றாள் மரகதம்.

"அப்படியெல்லாம் அவரை ஒன்றும்சொல்லாதே மரகதம்! அவர் நல்லவர்; அன்பே உருவானவர்; சகவாசதோஷம் அவரைக்கொன்றுவிட்டது; எப்படியோ சீட்டாடவும், மதுபானம்அருந்தவும் கற்றுவிட்டார்; வேலை போய்விட்டது; வருமானம் சிதைந்தது; வறுமை பிடித்துத்தின்றது; அவர் கேட்டபொழுதெல்லாம் பணம்கொடுக்க என்னால்இயலவில்லை; பழக்கம் அவரை வாட்டிவதைத்தது; பட்டதாரியான அவர் மானம்மரியாதை இழந்தார்; என்னை வேதனைப்படுத்தினார்; நீ கேட்டது, நான்சொல்லியது அனைத்தும் உண்மை.

"இன்னும்கேள், விரல்ஒன்று கண்ணைக் குத்திவிட்டால் அதற்காக அந்த விரலை வெட்டியெறிந்துவிடமுடியுமா? ஒருகாலம் மலைபோல இன்பம்அனுபவித்தோம்; இப்பொழுது ஒருதனி துன்பம் காண்கிறோம்; இன்றைய கஷ்டவாழ்வு தெய்வத்திருவருளால் நாளை மதுரவாழ்வாக மாறக்கூடாதா? அந்த ஒரேநம்பிக்கையால்தான் நான் உயிர்வாழ்கிறேன் மரகதம்; நீ என்னைவிடப் படித்தவள்; உலகஞானம் பெற்றவள்; ஆனால், பிறசமயத்தினளான உனக்கு எங்கள்திருமறையின் தத்துவங்கள் தெரியாது.

"இன்னமும்கேள், எங்கள் சத்திய திருச்சபையில் மெய்விவாகம் வெறும் சடங்கல்ல; தெய்வத்தின்முன் இணைக்கப்பட்ட எங்கள்இருவரையும் யாராலும் மரணம்வரையில்பிரிக்கமுடியாது; அவ்வாறு கூட்டுவித்த அத்தெய்வத்தாலும் இயலாது; அத்தகைய மெய்மறைப்பாலை அருந்தியதினால்தான் நான் இத்தனைகஷ்டங்களையும் இன்முகமாய் அனுபவிக்கமுடிகின்றது; இடையேவந்த இந்தஇடையூறு இடையிலேயே மக்கிவிடுமென்ற நம்பிக்கை எனக்கு உள்ளது; என்றாவது ஒருநாள் என்கணவர் திருந்திவிடுவார்; இந்தவரண்ட பாலைவனவாழ்வு மலர்ப்பொய்கையாய் மாறும்; என் பிரார்த்தனை அதுஒன்றுதான் மரகதம்."

"எஸ்தர்! நீ என்றுமே பிடிவாதக்காரி; நீ எனக்கே புத்திசொல்லுகிறாய்; கன்னியர்மடத்தில் உருவான உன் ஆரம்பவாழ்க்கை கண்ணீருடன் முடியும்போலிருக்கின்றது; என்கணவருக்கு ஒருமாதவிடுமுறை கிடைத்தது; அவருடைய தம்பிஒருவர் இங்கிருக்கிறார்; அவர்வீட்டிலதான் நாங்கள் தங்கியிருக்கிறோம்; இவ்வளவு பிடிவாதக்காரியான உனக்கு நான்என்ன செய்யமுடியும்? நான் சென்றுவருகிறேன்......"

"என்கணவரின் முகத்தைக்கண்டு எத்தனையோ நாட்களாய்விட்டன; அவர் எங்கிருக்கிறார்என்றும் தெரியவில்லை; இனிஅவரை எதிர்பார்ப்பதில் பயனில்லை; நீ தயவுசெய்து இந்த அற்ப உதவியைச் செய், உனக்குக் கோடி புண்ணியமுண்டாகும்" என்றாள் எஸ்தர்.

"உடனேகேள் எஸ்தர்; உனக்கு என்னவேண்டும்? பணம்வேண்டுமா? ஆஸ்பத்திரியில் உன்னைக்கொண்டு போய்ச் சேர்க்கட்டுமா? சுகமடையும் வரை என்னுடன் தங்கிவிடுகிறாயா?" என்று அடுக்கினாள் மரகதம் கேள்விகளை.

"உன்னை அவ்வளவு சிரமப்படுத்த நான் முட்டாள்அல்ல மரகதம்; நான் சீக்கிரம் மரித்துவிடுவேன்; நீ போகும் வழியில்தான் எங்கள் மாதாகோவில் இருக்கிறது; அங்குசென்று எங்கள் குருமாரில் ஒருவரைச்சந்தித்து என் விலாசத்தைத் தெரிவித்து ஒருபெண் மரணத்தறுவாயில் இருக்கிறாளென்று மட்டும் தெரிவித்துவிடு......!"

"எஸ்தர்! நான் உன்னைக்காண எவ்வளவோ சந்தோஷத்துடன் வந்தேன்; பள்ளிவாழ்வில் பத்தாண்டுகள் இணைபிரியாத் தோழிகளாய் வாழ்ந்தோம்; ஏழையானநான் அன்று உன்னால் அடைந்த உதவிகள் அளவற்றன. அவைகளை நான்மறக்கவில்லை, மறக்கவும் முடியவில்லை; இதோ, உன்பள்ளித்தோழிகொடுக்கும் அன்பின் காணிக்கையை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும்; உன் ஆசைப்படி சுவாமியாரிடம் சொல்லிச் செல்லுகிறேன்" என்று அவளின் தளர்ந்த கைகளில் பத்துரூபா நோட்டுகள் இரண்டை வலுக்கட்டாயமாய்த் திணித்துக் கண்ணீர்வடித்தபடி வெளியேறினாள் மரகதம்.

மரகதம் அளித்துச்சென்ற அந்த ரூபாநோட்டுகளை வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தாள் எஸ்தர். அதேசமயத்தில் அவள்கணவனான பால்ராஜ் அவள்முன் தோன்றினான். பஞ்சடைந்த அவள்கண்கள் பூரிப்பால் மிளிர்ந்தன, சொலித்தன. "அத்தான் வந்துவிட்டீர்களா? உங்களைக்காண நான் கொடுத்துவைத்திருந்தேனா? என் பிரார்த்தனையை ஆண்டவர் கேட்டுவிட்டாரா? விளக்கை ஏற்றுங்கள் அத்தான்; உங்கள்மலர்முகத்தை ஒருதரம் பார்க்கிறேன்" என்றாள் ஆசை பொங்க.

பால்ராஜ் விளக்கை ஏற்றினான். கரியஇருள் பயந்தோடியது. மனைவியின்பக்கத்தில் அமர்ந்தான். எத்தனையோ விஷயங்களைச்சொல்ல அவன் அதரங்கள் துடித்தன. ஆனால், மனவேதனை அவனைக் கற்சிலையாக்கிவிட்டது. அவன் பேசாதவற்றை அவனது கலங்கியகண்கள் பேசின.

"என் அத்தான் இந்தக்கண்ணீர்? நான் ஏதும் தவறுசெய்துவிட்டேனா? உங்களுக்கு ஏதாவதுதீங்கு நேரிட்டதா? இத்தனைநாள் எங்கேசென்று இருந்தீர்கள்? ஏதாவது சாப்பிட்டீர்களா? நான் அடுப்புமூட்டி ஒருவாரமாகிறது; உண்மையாய்ச் சொல்லுகிறேன் நீங்கள்என்னால் கொஞ்சமும் சுகப்படவில்லை; ஏன் இந்தஏழையை மணந்துகொண்டீர்கள்? பணக்காரர் வீட்டில் பெண்கொண்டிருந்தால் நீங்கள் எவ்வளவோசந்தோஷமாய் இருந்திருப்பீர்கள்; உங்களைக் களிப்பிக்க என்னிடம ஒன்றுமில்லை; இதோ, என்தோழிஒருத்தி சற்றுமுன் இதைக் கொடுத்துச்சென்றாள்; எடுத்துக் கொள்ளுங்கள் உங்கள்செலவுக்கு."

"போதும், நிறுத்து எஸ்தர்! உன் சொற்கள் என்னைச் சித்திரவதைசெய்கின்றன; என்னை மன்னித்துவிடு; நான் திருந்திவிட்டேன்; மனிதனாய் விட்டேன்; வறுமையில இன்பத்தையும், துன்பத்தில் சந்தோஷத்தையும் காட்டி என்னைக் கண்திறக்கச்செய்துவிட்டாய்; இனி நீசாக நான்விடமாட்டேன்; இதோ நல்ல வைத்தியரை அழைத்துவருகிறேன்" என்று எழுந்தான் பால்ராஜ்.

அவனைத் தடுத்த எஸ்தர் "நீங்கள் என்னுடன் என்பக்கத்தில் இருந்தாலே போதும்; உலகவைத்தியம் இனிஎனக்குப் பயன்படாது" என்றாள். அப்போதுவாசலில் குதிரைவண்டி ஒன்று வந்துநின்றது. சிறுவர்இருவர் விளக்கு ஏந்தி முன்னேவர, குருவானவர் திவ்விய சற்பிரசாதநாதருடன் உள்ளே நுழைந்தார். எஸ்தர் உள்ளக்குழைவுடன் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்தாள். பாவமன்னிப்புப் பெற்றாள். குதூகலத்துடன் ஆத்துமபோசனம் செய்தாள். அவஸ்தைப்பூசுதல் பெற்றாள். அவளை ஆசீர்வதித்து, ஆறுதல் சொல்லிக் குருவானவர் வெளியேறினார்.

அந்த ஆத்துமபேரின்பத்தில் எஸ்தர் சிறிது கண்ணயர்ந்தாள். இரவு மணி பன்னிரண்டு அடித்தது. எஸ்தர் கண்திறந்தாள். பக்கத்தில் பால்ராஜ் கண்விழித்திருப்பதைக் கண்டாள். உடனே அவன்கரங்களை பற்றித் தன் கொதிக்கும்மார்பில் சேர்த்துக்கொண்டாள் அந்தக்குளிர்ந்தகைகள் அவள் அகத்திற்கும், புறத்திற்கும் இதமளித்தன. "அத்தான்! நான் புண்ணியவதி; அநேகபெண்களுக்குக் கிட்டாத சௌபாக்கியம் எனக்குக் கிடைத்துவிட்டது; நான் உங்கள்மடியில் தலைசாய்த்து உயிர்விடப்போகிறேன்; ஏதாவது அர்ச்சியசிட்டவர் வரலாறு சொல்லுங்கள், கேட்டுக்கொண்டே தூங்குகிறேன்" என்றாள்.

"எஸ்தர்! நோயாளிக்குத்தானே மருந்து; நீதான் பிறந்தநாள்முதல் பச்சைக் குழந்தையாயிருந்து மோட்சத்தைப் பெற்றுக்கொண்டுவிட்டாயே; உனக்கு எதற்கு மற்றக்கதைகள்? நீ உன்தோழியுடன் பேசிக்கொண்டிருந்த அனைத்தையும் வெளியிலிருந்தே கேட்டேன்; மன்னிக்கும் உன் மனப்பண்பை உணர்ந்தேன்; என்னால் நீ சுகப்படவில்லை; ஆனால், அதற்கு மாறாய் என்னையும் உன் நல்வழிகளால் ஆட்கொண்டுவிட்டாய்; நான் திருந்திவிட்டேன்; கண்ணீர்வடித்துப் பிராயச்சித்தம் செய்துவிட்டேன்; நீ என் கறைப்பட்ட வாழ்வைச் சீர்ப்படுத்த முனைந்த வானதூதன்; உன்னை இனி நான் என்றும்மறவேன்; வெறியால் நான் உன்னை அடித்தேன், என்கைகளை அணைத்து முத்தமிட்டாய் நீ; சூதாட்டத்திற்கு நீ பணம்கொடுக்கவில்லைஎன்று நான் உன்னைஉதைத்தேன், நீ என்கால்களை முத்தமிட்டாய்; கோபத்தில் தீப்பொறிகள் கக்கினேன், அவ்வகளை நீ புகழ்மொழிகளாய் ஏற்றுக்கொண்டாய்; என் சொல், செயல், நோக்கில் மிருகமாய் நடந்தேன், நீ அவை அனைத்தையும் புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்டாய்; ஏழ்மையில் நிறைவுகண்டாய், வறுமையில் இன்பம்நுகர்ந்தாய், துன்பத்தில் சிரித்தேமிதந்தாய்; சுருங்கச்சொல்லின் வாழ்வின்பாரத்தை ஆண்டவர் மேல்சுமத்திக் கவலையற்றுச் சீவித்தாய்; எஸ்தர்! என்னைமன்னித்ததாக ஒருவார்த்தை சொல், நான் புனிதனாவேன்" என்றான். அவள் புன்சிரிப்புடன் சிறிதேகண்களைமூடி அவன் மடிமேல் தலைசாய்ந்து படுத்திருந்தாள். "எஸ்தர்! எஸ்தர்! எஸ்தர்!" என்று பன்முறை அழைத்தான் பால்ராஜ். அவள் அசையவில்லை. நித்தியமோனநிலையில் லயித்துவிட்டாள் எஸ்தர்.

## அவர்களைக் காண...

— அமுது —

● பிறந்த பொன்நாட்டையும், பெற்றார் உற்றாரையும் பிரிந்து, தங்கள் தாய்மொழியைக்கூட மறந்து, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வந்து ஓடிஓடி ஓய்வில்லாமற் பணிபுரியும் அந்த அன்புருவங்களைக் கண்ணுற்காண ...

● அந்த மலைச்சரிவிலே, இந்த வீதியின் சந்தியிலே, உல்லாசப்பிரயாணத்திலே, ஆற்றுக்குளிப்பிலே, தூக்கத்திலே, சொற்பொழிவிலே உலகவாழ்வை முடித்துக்கொள்ளும் மனிதரின் சோகமான சம்பவங்களை நாளாந்தம் வாசிக்க......

● வைத்திய சாலைகளில் பெருமூச்சுக்களையும், கண்ணீர்த்துளிகளையும், கோட்டில் பரிதாபத்துக்குரிய வழக்குகளையும், வீட்டில் தில்லுமுல்லுக்களையும்கண்டு ஒருகணம் சிந்திக்க......

● நவநாகரிகத்தின் கறைகள் படிந்த காதற்சோடிகள் தங்கள் கனவுகள் நீர்க்குமிழிகள் என்று கண்டு, வாழ்க்கையே புளிப்படைந்து ஏமாற்றத்தோடு நிற்பதைப் பார்க்க......

● பட்டிலே, சந்தனப்பொட்டிலே, அலங்காரச் சரக்குகளிலே — பண்படுத்தப்பட்ட சரீரவாழ்க்கையின் அடுத்த அதிகாரத்தை நேரிலே காண......

● புற்றீசல்போலப் பெருக்கெடுத்து, மாசற்றஉள்ளங்களில் மயக்க மருந்துகொடுக்கும் பல்லாயிரம் நூல்களையும், திரைப்படங்களையும் பார்த்தவர்களின் குறிப்புகளைக்கேட்க...

● நமதுமத்தியில் சஞ்சரிக்கும் தூய்மையான சாயல்களையும், அவர்களுடைய தாகமானசேவைகளையும் கண்டு மனம்களிக்க......

● அன்று ஐயாயிரம் பேருக்கு அமுதளித்தவனை, வஸ்திரம்பட்டவுடன் வாதைநீக்கிய மகாதெய்வத்தைக் கையில்வைத்திருக்கப் பாக்கியம்பெற்றவர்களைக்காண......

● ஒருநல்ல கனியை ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்தவனென என்னை நான்சொல்லிப் பெருமையடித்துக்கொள்ள......

**என் மகனே!**

**நீ ஒரு குருவானல்!**

என்று மனம்சொல்லிச் சுவைக்கின்றதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்செல்வி

## முகவுரை

இதில் அடங்கியவைகள் பெரும்பான்மையாய் மரியாயின் சேனை ஒழுங்குப்புத்தகத்திலிருந்து தெரிந்தெடுத்து எட்டு அதிகாரங்களாகத் தொகுத்து எழுதப்பட்டுள்ளன. ஏனெனில், மரியாயின்சேனை ஒழுங்குப்புத்தகமானது சற்று விலையுயர்ந்ததாயிருப்பதாலும், அதிலே அவசியம் வாசித்து அறியவேண்டியவைகள் 475 பக்கங்களைக்கொண்ட அப்பெரிய புத்தகத்தில் ஆங்காங்கே பரந்திருப்பதாலும் கத்தோலிக்க தமிழுலகம் எளிதில் வாசித்தறிந்து மரியாயின் சேனையை ஒவ்வோர் கிராமத்திலும் ஸ்தாபித்துப் பலரும்அங்கத்தினராக அதில்சேரச்செய்து பன்மடங்காகக் கத்தோலிக்க ஊழியம்புரிந்து கிறீஸ்துநாதரின் இராச்சியம் எங்கும்பரவச் செய்யவேண்டுமென்ற நோக்கமாகவே இதனைஎழுத முன்வந்தோம்.



# மரியாயின் சேனை

முதலாம் அதிகாரம்

## இதன் விளக்கம்

மரியாயின்சேனைஎன்பது கத்தோலிக்கரை அங்கத்தினராகக் கொண்ட ஓர்சங்கம். கத்தோலிக்க திருச்சபையானது உலகத்தையும், அதன் துஷ்டசக்திகளையும் எதிர்த்து ஓயாது ஆடிக்கொண்டிருக்கும் [illegible]பாரில் தொண்டுசெய்யவேண்[illegible]யிருக்கிறது. அதற்காக[illegible]வ கத்தோலிக்கர் இச்சங்கத்தி[illegible]சேர்ந்துகொண்டிருக்கின்றனர். இது ஓர்சேனை அல்லது பட்டாளம் என்றும் சொல்லலாம். மரியாயின்சேனை என்றநாமம் எவ்வளவோபூரணபொருத்தமாகத் தெரிந்தெடுக்கப்பட்டபெயர் என்று பரிசுத்தபிதா 11-ம்பத்திநாதர் கூறியிருக்கின்றார்.

இது சந்திரனைப்போல் அழகு சௌந்தரியமுள்ளவளும், சூரியனைப்போல் பிரகாசம்உள்ளவளும், போர்க்களத்தில் அணிவகுக்கப்பட்ட சேனையைப்போல் சாத்தானையும், அவன்சைனியங்களையும் நடுநடுங்கச்செய்பவளும், வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியுமான அமலோற்பவநாயகியைத் தலைவியாகக்கொண்டிருக்கிறது. பிரமாணிக்கம், புண்ணியம், மனோபலம் ஆதிய வற்றால் சேனையாளர் தங்களை மோட்ச இராக்கினிக்குப் பாத்திரவான்களாக்கிக்கொள்ளுகின்றனர்.

ஆதலின் இது ஓர்சேனையைப் போல — பெரும்பாலும் பூர்வீக உரோமைச் சேனையைப்போல அமைக்கப்பட்டிருக்கிறது. பூர்வீக உரோமைச் சேனையின் நாமங்களையும் அது சுவீகரித்திருக்கிறது. ஆனால், மரியாயி[illegible] சேனையும், அதன் ஆயுதங்களும் பூலோகசம்பத்துக்களைச் செயிப்பதற்கானவையல்ல.

இப்படியான ஓர்சேனையைப் பற்றி அநேகர் இன்னும்அறிந்து கொள்ளவில்லை. மரியாயின்பக்தர்கள்யாவரும் இதில்சேர்ந்து ஊழியஞ்செய்ய வேண்டுமென்று திருச்சபை மிகவும் ஆசிக்கிறது. இச்சேனை உலகமுழுதும் பரவியிருந்தாலும் நாம்வசிக்கும் இவ்விலங்கைத்தீவிலே அநேக இடங்களில் இன்னும் ஆக்கப்படவில்லை. இச்சேனை இருந்துவரும் இடங்களிலும் அநேகர் இதில் சேர நினைக்கிறார்களில்லை. இதற்குக்காரணம், சேனையின் குணதிசயங்கள், நோக்கம், ஊழியம்முதலியவைகளை மரியாயின் பக்தர்கள் இன்னும் அறியாமலிருப்பதே.

ஆகையால், இனிமேலாவது மரியாயின்பக்தர்கள்யாவரும் இவைகளைப் படித்தறிந்து ஒவ்வொருவிசாரணைப்பங்கிலும் ஓர் சேனையை ஆக்குவார்களென்றும், அதிகமான அங்கத்தினரை அதில்சேர்த்து அதன்ஒழுங்குப்பிரகாரம் உத்தமகத்தோலிக்க ஊழியங்கள் புரிந்து நமது சேனைத்தலைவியாகிய அமலோற்பவநாயகியின் விருப்பங்களைப் பூர்த்திசெய்வார்களெனவும் காத்திருக்கிறோம்.

இரண்டாம் அதிகாரம்

## சேனை அங்கீகாரமபெற்றது

மரியாயின்சேனை திருச்சபையின் அங்கிகாரம் பெற்றிருக்கிறது. 1933-ம்ஆண்டுபுரட்டாசி மாதம் 16-ந்திகதி 11-ம்பத்திநாத பாப்பானவர் மரியாயின் சேனைக்குக் கூறிய ஆசீர்வசனமாவது:



"மரியாயின்சேனை செய்துவரும் இந்தஉன்னதமான ஊழியத்தை அதிகம் விசேஷவிதமாக ஆசீர்வதிக்கிறோம். அதன் நாமமே அதைஆதரித்துப் பேசுகிறது. அதன் துவசத்தில் தோன்றும் அமலோற்பவநாயகியின் உருவம் மேலானபரிசுத்தவிஷயங்களைப் பிரஸ்தாபிக்கிறது. பரிசுத்தகன்னிமரியம்மாள் இவ்வியஇரட்சகருக்கும், நம்மெல்லோருக்கும்மாதா. அவள் சிலுவையடியில் நமக்கு மாதாவானதினால் அவள் நம்முடையஇரட்சணியத்தில் ஒத்துழைக்கிறாள். அந்தஒத்துழைப்பின் நூற்றூண்டுவிழாவையும், மரியாள் அனைவருக்கும்தாயான நூற்றூண்டுவிழாவையும் நிகழும்வருடம் கொண்டாடுகிறோம். நீங்கள் செய்துகொண்டிருக்கும் அப்போஸ்தலத்துவ செபங்களிலும், ஊழியங்களிலும் இன்னும் அதிகமானஊக்கம்செலுத்த வேண்டுமென்று உங்களுக்காகப்பிரார்த்திக்கிறோம். அவ்வாறுசெய்வதினால் சருவேசுரன்உங்களையும் இரட்சணியத்தில் ஒத்துழைப்பவர்களாக்குவார். இரட்சகருக்கு நன்றிசெலுத்த இதைவிடச் சிறந்தவழிவேறுகிடையாது" என்பதே.

மேலும் 1939-ம்ஆண்டு ஆனி மாசம் 12-ந்திகதி நமது பரிசுத்த பிதாவாகிய 12-ம்பத்திநாதர் பாப்பரசர் கருதினால்பித்ஸாரோ ஆண்டவர் மூலமாய் மரியாயின் சேனைத் தலைவருக்கு எழுதியனுப்பிய ஓர்திருமுகத்திலுள்ள சிலவசனங்களை இங்குதருகிறோம்.

"இச்சேனை பரிசுத்தஸ்தானத்தின்மீது பக்திவிசுவாசம் கொண்டிருக்கிறதென்றும், மேற்றிராணிமார்களின் கட்டளைகளையும், விருப்பங்களையும் எப்பொழுதும் பிரமாணிக்கமாய்ச் சி[illegible]மேற்கொண்டு நிறைவேற்றிவைக்கப் பயபக்தியானகருத்துக் கொண்டிருக்கிறதென்றும் உறுதிகூறுவதற்காக, தாம் அர்ச். இராயப்பர் பத்திராசனத்திற்கு உயர்த்தப்பெற்ற இத்தனை நாட்களுள் கிறீஸ்துநாதரது பிரதிநிதியின் பாதாரவிந்தங்களைத் தாங்களும், ஸ்ரீமான் டவ்ப்அவர்களும் தேடிவந்து தங்கள் இருவருக்கும் தம்மீதுள்ளபட்சமும் தாழ்ச்சியும் பொருந்திய பக்தியை வெளிப்படுத்தியதை நினைவுகூர்ந்து பரிசுத்ததந்தைஅவர்கள் மனமகிழ்ந்தார்கள். பின்னர் தந்தையவர்கள் மரியாயின்சேனை உத்தியோகஸ்தர்களுக்கும், அங்கத்தினருக்கும் தமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை அருளுவதாக அவர்களுக்குத் தெரிவிக்குமாறும், சருவேஸ்பரனின் அதிமிக தோத்திரத்துக்காகவும், பூலோகத்தில் கிறீஸ்துநாதரின் இராச்சியத்தைப் பரப்புவதற்காகவும் இன்னும் பெரியமுயற்சிகளை மேற்கொள்ள அவர்களை உற்சாகப்படுத்துமாறும் தெரிவிக்கிறார்கள்" என்பதே. மேலும், அத்திருமுகத்தில்தானே கருதினால்ஆண்டவர் தமது சொந்த அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் சொல்வது: "நாமே மாதாவின் உன்னதகொடியின்கீழ் சேவிக்கும் சேனையாளரின் ஊழியங்களை மெய்யாகவே வெகுவாக வியந்து பாராட்டுகிறோம். அவர்கள் அப்போஸ்தலர்மீதுள்ள அன்பினாலும், அப்போஸ்தலத்துவத்திற்கு ஆணிவேராயிருக்கின்ற ஆத்துமஇரட்சணியதாகத்தாலும் ஏவப்பட்டு இவ்விரண்டு பேர்களாய்ச் சென்று தங்கள்தங்கள் அருமையான ஞானதரும அலுவல்களைச் செய்கிறார்கள். மிஷன்நாடுகளிலே ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் அவர்கள் செய்துவரும் வேலைகளை அவர்கள் வேறுநாடுகளில் செய்யும்வேலைகளைவிட அதிகம் மெச்சுகிறேன். அந்த நாடுகளில் அவர்கள் பலமேற்றிராணிமார்களின் ஆதீனத்திற்குக் கீழ்ப்பட்டு அப்போஸ்தொலிக்க அலுவல்கள் செய்துவருகிறார்கள். இந்தஊக்கமுள்ள ஊழியரின் உழைப்பை யேசுக்கிறீஸ்துநாதர் ஆசீர்வதிப்பாராக! அவருடைய பரிசுத்ததாயார் அவர்களை எப்பொழுதும் தமது இருதயத்தில் கொண்டிருப்பாளாக"என்பதே.

இப்படியே மரியாயின்சேனை திருச்சபையின் அங்கிகாரம்பெற்றிருக்கிறது. அதுபோலவே ஒவ்வொரு பிறெஸீடியங்களும் (Praesidium) அங்கிகாரம்பெற்ற சேனைநிருவாகசபைகள் ஒன்றின்மூலம் சேனையோடு இணைக்கப்படல் வேண்டும். அல்லாவிடின் சேனை அங்கத்துவமில்லை. உலகமுழுவதிலுமுள்ள இச்சேனைகள் ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி வேறோர்அதிகாரத்தில் சேனையின்பிரமாணிக்கம் என்றபிரிவில் விபரித்துக்காட்டுவோம்.

(தொடரும்)

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

அர்ச். வின்சென்ற் டி போல் தருமசபை: மட்டக்களப்பு, தாண்டவன்வெளி பரிசுத்த வியாகுலமாதா ஆலய பங்கைச்சேர்ந்த அர்ச். வின்சென்ற் டி போல் தருமசபை அங்கத்துவசகோதரர்கள் அவர் திருநாளை இம்மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை அதிவிமரிசையாகக் கொண்டாடினர். அன்றுகாலை 6 மணிக்குப் பங்குவிசாரணைக்குருவர் வண. ஜோர்ஜ் ஈ.எல். வம்பேக் சுவாமிகளாற் பாட்டுப் பூசை நிறைவேறியது. சபை அங்கத்தினரும், வறியோரும் திவ்வியபூசைகண்டு திருவிருந்தருந்தினர். பூசைக்குப்பின் வறியோருக்குக் காலைப்போசனமும், பணமும் உதவப்பட்டன. ஈற்றில் வண. பங்குவிசாரணைக் குருவர்அவர்கள் தமதுபங்கிலுள்ள இச்சபை மேன்மேலும்வளர்ந்து நமது வறியோரைத் தாபரிக்கப்போதிய பணப்பலமும், அங்கத்துவபலமும் அதிகரிக்கும்படியாகத் தேவதாயாரைநோக்கிச் செபமாலை சொல்லும்படி கேட்டுக்கொண்டார். பின்னர் சபை அங்கத்தினரும், சுவாமியவர்களும் பெண்பாடசாலை மண்டபத்தில் காலைப்போசனம் அருந்தியபின் தலைவர் கே. ஆர். அகுஸ்தீன் அவர்களாலும், வண. சுவாமியவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றுச் செபத்துடனும், சுவாமியவர்களின் ஆசியுடனும் விழா இனிதே முடிவுற்றது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வயோதிபர் மடம்

### மட்டக்களப்பு

ஆவணிமாதம் 5-ந் திகதி 1957 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு

**மகாவந். திரிகோணமலை மேற்றிராணி ஆண்டவர்**

**அவர்களால்**

மட்டக்களப்பு வெட்டுக்காட்டில் இருக்கும் வயோதிபர் மடத்துப் புதியகட்டிடங்கள் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்படும்.

வறியோரின் சின்னச்சகோதரிகளின் சகல அன்பர்களும், பேருபகாரிகளும், நண்பர்களும் அன்பாய் அழைக்கப்படுகிருர்கள்.

## மரண அறிவித்தல்

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிற்ரெட்**

**இல. 4, கண்டி ரோட், யாழ்ப்பாணம் — பதிவு இல. M. 110**

கீழ்க்காணும் மேற்படி சங்க அங்கத்தவர் மரணத்திரையினுள் மறைந்ததை மிகவும் விசனத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம். இறந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரணசேவைப் பணத்தைச் செலுத்தவும்.

இறந்தவர் இல. 1237 இறந்தவர் பெயர்: நா. சின்னத்துரை
விலாசம்: கில்னர் பாடசாலை லேன். திகதி: 21-7-57

த. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி

## உல்லாச யாத்திரை

கொழும்பு, கிராண்ட்பாஸ் அர்ச். சூசையப்பர் ஆலயத்தைச்சேர்ந்த யேசுவின் திருஇருதய பக்திச்சபையார் (தமிழ்ப்பிரிவு) 8-7-57 காலை 5 மணிக்குப் பங்குக்குரவர் வண. பர்ஞந்து சுவாமியவர்கள் தலைமையிலே ஒரு உல்லாசயாத்திரை நடத்தினர். காலை 7-15 மணிக்கு யாத்திரைக் கோஷ்டி கேகாலை, அர்ச். தேவமாதாவின் ஆலயத்தைஅடைந்தது. 7-20 மணிக்குச் சுவாமியவர்களால் திவ்விய பூசை நிறைவேறியது. கோஷ்டியிலே பெரும்பான்மையினர் சற்பிரசாதம் பெற்றனர். பூசைமுடிந்ததும் எல்லோரும் காலைப்போசனம் அருந்தியபின் 8-30 மணிக்கு மீண்டும் யாத்திரை தொடங்கியது. 10 மணிக்கெல்லாம் பேராதனைத்தோட்டத்தை யடைந்து சுமார் 11-15 மணிவரை தோட்டத்திலுள்ள பலவிதமரங்களையும், செடிகளையும், புஷ்பங்களையும், காய்கனிகளையும் பார்த்துரசித்துத் தோட்டத்தினருகே காம்பீரமாக ஓடிக்கொண்டிருக்கும் மகாவலிகங்கையைக்கடக்க உபயோகமாகும் ஆடுபாலத்திலே அங்குமிங்கும் சென்று பரவசமெய்தினர். 12மணிக்குக் கண்டி, அர்ச். அந்தோனியார் ஆசனக் கோவிலையடைந்து சிறிது செபித்தபின் மத்தியான ஆகாரத்திற்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இடத்தையடைந்து போசனமருந்தி எல்லோரும் இளைப்பாறினர். மீண்டும் 2 மணிக்குக் குண்டகசாலை என்னுமிடத்திலே — மகாவலிகங்கைக் கரையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பரிசுத்த பாத்திமாநாயகி ஆலயத்தைத் தரிசித்துவிட்டு, அம்பிற்றி, பரிசுத்த லங்காநாயகி குருமடத்தைஅடைந்து, குருமடத்தின் சிலபகுதிகளைப்பார்வையிட்டனர். கோஷ்டியார் கடைசியாகக் கொழும்புக்குத் திரும்பும்பாதையில் பேராதனைச் சர்வகலாசாலைக் கட்டடத்தையடைந்தபோது அங்கு கோஷ்டியைச்சேர்ந்த வாலிபசகோதரர்களால் சில விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் வெற்றிபெற்றவர்களுக்குச் சுவாமிகளால் பரிசில்கள் வழங்கப்பட்டன. ஈற்றில் எல்லோருக்கும் சொக்கலேற்றும், சர்பத்தும் வழங்கப்பட்டதும் 5-30 மணிக்குக் கோஷ்டியினரின் டஸ் பேராதனையிலிருந்து புறப்பட்டு இரவு 9 மணிக்குக் கொழும்பையடைந்தது. பிரயாண ஆரம்பமுதல் முடிவுவரை செபமாலை-பிரார்த்தனையும், பக்திப்பாடல்களும் உல்லாசயாத்திரையைப் பரிமளிக்கச் செய்தன.

— நிருபர்

## எட்டியாந்தோட்டைத் தபால்

எட்டியாந்தோட்டை செண் வின்சென்ற் டி போல் தருமசபையின் இரண்டாவது வருடாந்தகூட்டம் எட்டியாந்தோட்டை அர்ச். மரியநாயகி பாடசாலை மண்டபத்தில் 19-7-57 வெள்ளி மாலை ஆயுள்வேதவைத்தியர் திரு. தர்மவர்த்தன தலைமையில் நடந்தேறியது. அன்றுகாலை 6-30மணிக்குச் சபையின் ஞானத்தலைவர் வண. பி. கொடியாஞே, எஸ். ஜே. சுவாமி அவர்களால் திவ்வியபூசை செய்யப்பெற்றுப் பகல் 11 மணிக்கு ஏழைகளுக்கு அன்னதானம்வழங்கப்பட்டது.

— நிருபர்

## சின்னமடுத்

## திருநாள் மகோற்சவம்

சின்னமடுத் திருச்செபமாலை மாதாவின் மகோற்சவம் வழமைபோல் ஆடிமாசம் 27-ந் திகதி ஆரம்பமாகி ஆவணிமாசம் 5-ந்திகதி முடிவடையும். 4-ம்திகதி மாலை வேஸ்பரும், 5-ம்திகதி காலை பெரியபாடற்பூசையும் பூசையின்பின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். சின்னமடுப்பதியை நாடிவரும் மக்களுக்கென வழமைபோல் விசேஷ வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**B. Wm. Jesu Thasan, O. M. I.**
கட்டளைக்குரு

## கல்லாற்றுத்தபால்

அர்ச். அருளானந்தர் திருநாள்: கல்லாற்றிலே கோயிலகொண்டிருக்கும் அர்ச். அருளானந்தர் திருநாளை இங்குள்ள கத்தோலிக்கமக்கள் சென்ற 21-7-57 ஞாயிறன்று விமரிசையாகக் கொண்டாடினார்கள். அதற்குமுந்திய ஒருமாதகாலமும் வழமைப்பிரகாரம் மாலை ஆராதனை நடைபெற்று வந்தது. 20-ந் திகதி மாலை பிரார்த்தனையின்பின் வண. ஓ. பி. எஸ். சந்தண சுவாமியாரும், வண. ரோபேட் சுவாமியாரும் உதவி புரியப் பங்குக்குரவர் வேஸ்பர்பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளினுர். அவ்வமயம் மெய்விவாக தேவதிரவியானுமானத்தைப் பற்றி வண. ரோபேட் சுவாமியார் அரியதோர்பிரசங்கம் நிகழ்த்தினுர். அதன்மேல் பக்தர்கள் பக்தி பக்தியாக மெழுகுவர்த்திகளை ஏந்திச்செல்லப் பிரதானநான்கு வீதிகள்வழியாக அர்ச். அருளானந்தரின் திருச்சுரூபம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. அடுத்தநாள் திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளெனி ஆண்டவர் பாட்டுப்பூசை நிறைவேற்றித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளினுர். அதன்பின் திருப்பண்டம் பக்தர்களுக்கு முத்திசெய்யக் கொடுக்கப்பட்டு, அன்னதானமும் நடைபெறலாயிற்று.

— நிருபர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தாலும், சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். அருளானந்தர், அர்ச். பிலோமினம்மாள், அர்ச். றீத்தம்மாள் இவர்களதுமன்ருட்டாலும் எனதுமூத்தகுழந்தைக்கு ஏற்பட்டிருந்தவாதநோய் குணமாகியது. எனது இருதயபூர்வமான நன்றியறிந்த ஸ்தோத்திரம். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். இவர்களுடையநாமம் என்றும் புகழப்படுவதாக. மேலும் பூரணசுகம் என்குழந்தைக்குஅருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

அம்பாரை J. S.

* * *

சங். அல்போன்ஸாகன்னிகையின் வல்லபமிகுந்த மன்ருட்டினுல் என்குழந்தைக்கு ஏற்பட்டிருந்த கொடியவாதநோய் குணமானது. அவருடையநாமம் புகழப்படுவதாக. சர்வேசுரன் மேலும்மேலும் தமதுஇந்தப்பரிசுத்த கன்னிகையின்மூலமாக வரப்பிரசாதங்களை அருளுமாறு பிரார்த்திக்கிறேன். இந்தப்பரிசுத்தவாளிக்கு வெகுவிரைவில் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளும்படிக்கு யேசுவின் திருஇருதயத்திடம் மன்ருடுகிறேன். தேவன் எப்போதும் மகிமைப்படுத்தப்படுவாராக.

அம்பாரை J. S.

## GOVT. TENDERS

**Jaffna Kachcheri**

N2682 – Toll Rent – Karaitivu-Kayts Ferry Service 1-9-57—30-9-58. Closing date to tenders 21-8-57. For full particulars see Govt. Gazette 26-7-57.

## 4-ம் வருட

## மரண ஞாபகம்



பிறப்பு: 23—7—31 இறப்பு: 28—7—53

எமது செல்வப் புதல்வனும், மன்னுர், அர்ச். சவேரியார் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டித் தலைவனுயுமிருந்த செல்வன் M. K. அழகராசா அந்தோனிஐயா தனதுவாலிப வயதில் (22) எம்மை விட்டுப்பிரிந்து இன்ரேடு (28-7-57) நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

"சுமந்து பெற்றெடுத்த
மைந்தா மறந்தாயோ!
பிரிந்து வருந்துகிருேம்
எம்துயர் தீர்க்க வாராயோ!
அம்மா! என்றகுரல்
ஐயோ! அடங்கியதோ!
புவிமீது மைந்தாஎம்
பூரிப்பும் போனதுவோ!"

இதனைக் கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் இரந்து மன்ருடும்படி வேண்டுகிருேம்.

"சுவாமி! இவருக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்பசுகத்தைக் கட்டளையிட்டருளும். நித்தியகாலத்தின் பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக் கடவது."

இவர் பிரிவால் துயருறும்
சகோதரர்கள்:
ஜோட்ஜ் நவரட்ணம்,
பாக்கி[illegible] பத்மாவதி, சீமான்,
செ[illegible]த்துரை, பரிமளம்.
த[illegible]தை: மு. கந்தையா.
[illegible]ய்: க. செல்லம்மா.

## அர்ச். பிரான்சீஸ்குவின்

## மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 27-ந்தேதி சனிவாரம் பி. ப. 4-15 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்ருலயத்தில் நடைபெறும். அவ்வமயம் மூன்று அங்கத்தவர்கள் தமது வாக்குத்தத்தத்தை எடுப்பார்கள். இது ஓர் ஆடம்பரமான கூட்டமாயிருப்பதால் எல்லோரும் தமதுசபை அங்கிகளைக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கார்த்தருக்காக

உளமே உலகம்; அதுதானே மோட்சத்தை நரகமாக்கவும், நரகத்தை மோட்சமாக்கவும் வல்லது.

—மில்டன்

* * *

சாந்தியும், ஓய்வும் நிலையாத இடத்தில், நம்பிக்கை — அனைவருக்கும் வரும் நம்பிக்கை வந்தணைவதில்லை.

—மில்டன் (ஆங்கிலக்கவி)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 25-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org